# விவிலிய வினாடி வினா

## சரியான விடைகளை எழுதியவர்கள்

### அருட் சகோதரிகள்

ப்ளாஞ்மேரி OSM, குயின்மேரி CIC, பெல்லா ஜான்சி – மதுரை; அமலி போர்ஜியஸ் OSM, லில்லி சகாயம் OSM, ஜெய மேரி OSM, எதெல்பெர்கா OSM – திருச்சி; மரிய ஆரோக் OSM, பொலன்ஷியா OSM – நெல்லை; எமரென்ஸ் மேரி OSM, ஜெயமேரி CIC, மிரியம் CIC – திண்டுக்கல்; லூர்து மேரி CIC, ஐசிந்த் SJC, மேரி செசாரியா SSAM, ஹில்டா SJC – சென்னை; செலின் SJC, சின்னராணி SJC – அணிலாடி; அல்போன்ஸ் - திருமங்கலம்; கரோலாமேரி OSM – சிப்பிக்குளம்; ரெய்மண்ட் SJC, சகாயராணி SJC – கடலூர்; ஜெயா FSJ – மையனூர்; அமபெல் மேரி OSM, ஆக்னஸ் ஸ்டெல்லா OSM, வித்யா OSM - தூத்துக்குடி; குழந்தைமேரி OSM – தொட்டியம்; எப்ராசியாமேரி OSM – சேலம்; யூக்கரியா – அச்சரப்பாக்கம்; சிரோன் - திசையன்விளை; மதலேனாள் FSAG, எஸ்தர் ராணி FSAG – கிருஷ்ணகிரி; மரிய ஆன் ஜெயராணி – கழுகுமலை; ரொமானா OSM, லீலா மேரி OSM – நாகர்கோவில்; சவரியம்மாள் புறத்தாக்குடி.

### பொதுநிலையினர்

புஷ்பக்கண்னு – கோவை; செலின்மேரி, லீமா தெரஸ், இமாக்குலேட் சோபியா, பாத்திமா, ஆனி பீட்டர் ராஜ், ஜான்ஜோசப், சந்தனம் – திருச்சி; லீலாவதி, மார்கரேட் பெல்சியா, சிறிய புஷ்பம், அல்போன்சா ஜோதிமேரி, சாந்த மரியா, இருதய விஜிலா – திண்டுக்கல்; பிரான்சிஸ் பேசில், பிரான்சிஸ் அலோசியஸ் - சென்னை; வெர்ஜின் லூயிஸ் - திருநெல்வேலி; டெய்ஸி, மரிய ஜோசப் – மயிலாடுதுறை; அவிவா, ஆண்டோ - திருப்பத்தூர்; சகாய ராஜன் - ராம்நாடு; ஞானாபரணம் - மதுரை.



**குலுக்கல் முறையில் பரிசு பெறுபவர்கள்**

**அருள்சகோதரி. மரிய ஆரோக் OSM - நெல்லை**

**திருமதி. இருதய விஜிலா - திண்டுக்கல்**



**Owned and Published by Fr. A. CHINNAPPARAJ, OSM from Jyothi Matha Alayam. 5/301 Matha Koil Street, Rajiv Gandhi Road, Okkiampet, Chennai – 600 097 and Printed by A. RAJA REGAN at Devan Press, Old No.138/1, New No.158/1, Venkatachala Mudali Street, Royapettah, Chennai – 600 014.**
**Editor: Fr. A. CHINNAPPARAJ OSM.**







## பதிப்பாசிரியர் பக்கம்



# வார்த்தை

அருள்பணி. சின்னப்பராஜ் ம.ஊ.ச.,
ஜோதி மாதா ஆலயம், சென்னை.

**இறைஇயேசுவில் அன்புநிறை அன்னைமரி பக்தர்களே!**

நாம் பேசுகின்ற ஒவ்வொரு வார்த்தைக்கும் ஓர் அர்த்தம் இருக்கும். சில நேரங்களில் ஒரே வார்த்தைக்குப் பல அர்த்தங்களும் இருக்கும். இவ்வாறு நாம் பயன்படுத்துகின்ற ஒவ்வொரு வார்த்தையும் பல விளைவுகளை நமது வாழ்விலும், நம்மைச் சுற்றியுள்ளவர்களின் வாழ்விலும் ஏற்படுத்துகின்றது. நாம் பேசுகின்ற வார்த்தைகள் நம் எண்ணங்களையும் உள்ளத்தின் சிந்தனைகளையும் வெளிப்படுத்துகின்ற விதமாக இருக்கின்றன. ஒருவரின் வார்த்தைகளை வைத்தே அவருடைய குணாதிசயங்களை நாம் சொல்லிவிட முடியும்.

ஒரு வார்த்தைக்கு ஆக்கும் சக்தியும் உண்டு, அழிக்கும் சக்தியும் உண்டு என்பதை நம் வாழ்வின் எதார்த்தங்களிலிருந்து நாம் புரிந்துகொள்ளலாம். அதுமட்டுமல்லாமல் நாம் பயன்படுத்துகின்ற வார்த்தைகளில் நமது மகிழ்ச்சியும் பிறரின் மகிழ்ச்சியும் அடங்கியுள்ளது. ஏன் ஓர் வார்த்தையால் இன்று பல குடும்பங்கள் பிரிந்தும் கிடக்கின்றன; ஆனால், அதே ஒரு வார்த்தையால் பல குடும்பங்கள் இணைந்தும் மகிழ்ச்சியாகவும் இருக்கின்றன. இதையே வள்ளுவர், 'தீயினாற் சுட்டபுண் உள்ளாறும் ஆறாதே நாவினாற் சுட்ட வடு' என்று கூறுகிறார். இதன் விளக்கம் நாமனைவரும் அறிந்ததே. ஒருவனை மற்றொருவன் தீயால் சுட்ட புண் உடம்பில் வடுவாக இருந்தாலும் அவனது உள்ளத்துக் காயம் எளிதில் ஆறிப்போய்விடும். ஆனால் கொடிய வார்த்தைகளால் நெஞ்சைச்

### உள்ளே...


| | |
|---|---|
| மனுக்குல மாண்பு மரியா | - 06 |
| மே மாதம் - மரியின் மாதம் | - 08 |
| திருத்தந்தையின் தேவ தாய்ச் சிந்தனைகள் | - 12 |
| அம்மா!...!...!!.....!!! என்று அழைத்தால் | - 16 |
| ஞாயிறு திருவழிபாட்டுத் துணைவன் | - 18 |
| தூய ஆவியாரில் மகிழும் தாய் மரியா | - 24 |
| விவிலிய வினாவிடை | - 26 |
| அன்னை மரியாவின் திருப்பயணங்கள் | - 28 |
| ஜீவமாதாவிடம் ஜீவன் வேண்டி | - 31 |

சுட்ட வடு அதில் உடம்பில் வடுக்களை ஏற்படுத்தாவிடினும் உள்ளத்தில் புண்ணாகவே இருந்து ஒரு நாளும் ஆறாது.

ஆகவேதான், 'வார்த்தைகளை உதிக்குமுன் ஒருதடவை சுவைத்து பார்த்துவிடுங்கள்; உதிர்ந்த வார்த்தைகள் ஒருவேளை மன்னிக்கப்படலாம்; ஆனால், மறக்கப்படுவதில்லை' என்று ஒரு கவிஞர் கூறுகின்றார். ஆம் நாம் பயன்படுத்துகின்ற ஒவ்வொரு வார்த்தைக்கும் அதிக சக்தியுண்டு. நமது வார்த்தை பிறரின் மனதைக் காயப்படுத்தக்கூடிய ஒன்றாக இல்லாமல் அவர்களின் மனதில் மகிழ்ச்சியைக் கொணரக்கூடியதாக இருக்க வேண்டும். ஒருவன் எத்தகையத் துன்பத்தில் இருந்தாலும் நமது ஆறுதலான வார்த்தைகளால் அவரை இயல்பு நிலைக்குத் திரும்பச் செய்ய முடியும். அதே வார்த்தையால் பிறரின் மனதை நாம் எளிதாகக் காயப்படுத்தவும் முடியும். இத்தகைய ஆற்றல் நமது வார்த்தைக்கு உண்டு.

கடவுள் இவ்வுலகைப் படைத்தபோது அனைத்தையும் தமது வார்த்தையினால் படைத்தார் என்று விவிலியத்தில் நாம் பார்க்கின்றோம் (தொநூ. 1); 'மழையும் பனியும் வானத்திலிருந்து இறங்கி வருகின்றன; அவை நிலத்தை நனைத்து, முளை அரும்பி வளரச் செய்து, விதைப்பவனுக்கு விதையையும் உண்பவனுக்கு உணவையும் கொடுக்காமல், அங்குத் திரும்பிச் செல்வதில்லை. அவ்வாறே, என் வாயிலிருந்து புறப்பட்டுச் செல்லும் வாக்கும் இருக்கும். அது என் விருப்பத்தைச் செயல்படுத்தி, எதற்காக நான் அதை அனுப்பினேனோ அதை வெற்றிகரமாக நிறைவேற்றாமல் வெறுமையாய் என்னிடம் திரும்பி வருவதில்லை' (எசாயா 55:10-11). இந்த இறைவார்த்தை கடவுளின் வார்த்தைக்கு எவ்வளவு வல்லமையுண்டு என்பதை நமக்கு தெளிவுபடுத்துகின்றது.

'தொடக்கத்தில் வாக்கு இருந்தது; அவ்வாக்கு கடவுளோடு இருந்தது; அவ்வாக்கு கடவுளாயும் இருந்தது. வாக்கு என்னும் அவரே தொடக்கத்தில் கடவுளோடு இருந்தார்' (யோவான் 1:1-2); 'வாக்கு மனிதர் ஆனார்; நம்மிடையே குடிகொண்டார்' (யோவான் 1:14); 'ஆண்டவரே நாங்கள் யாரிடம் போவோம்? நிலைவாழ்வு அளிக்கும் வார்த்தைகள் உம்மிடம்தானே உள்ளன' (யோவான் 6:68); 'ஐயா, நீர் என் வீட்டிற்குள் அடியெடுத்து வைக்க நான் தகுதியற்றவன். ஆனால், ஒரு வார்த்தை மட்டும் சொல்லும்; என் பையன் நலமடைவான்' (மத் 8:8). மேற்கண்ட அனைத்து விவிலியப் பகுதிகளில் நம் ஆண்டவர் இயேசுவின் வார்த்தைகளைக் கேட்க மக்கள் ஆர்வம் கொண்டிருந்தனர்; அவற்றுக்காக ஏங்கினர். அவரிடமே நிலைவாழ்வு தரும் வார்த்தைகள் உள்ளன என்று நமக்கு எண்பிக்கின்றன.

'கடவுளுடைய வார்த்தை உயிருள்ளது, ஆற்றல் வாய்ந்தது; இருபக்கமும் வெட்டக்கூடிய எந்த வாளினும் கூர்மையானது; ஆன்மாவையும் ஆவியையும் பிரிக்கும் அளவுக்குக் குத்தி ஊடுருவுகிறது; எலும்பு மூட்டையும் மச்சையையும் அவ்வாறே ஊடுருவுகிறது; உள்ளத்தின் சிந்தனைகளையும் நோக்கங்களையும் சீர்தூக்கிப் பார்க்கிறது' (எபி 4:12). இத்தகைய ஆற்றல்





## மகப்பேறு வேண்டி ஜெபம்

அதிசயங்களையும் அற்புதங்களையும் அன்றாடம் நிகழ்த்தும் எம் இறைவா, வாழ்வின் ஊற்றும் தொடக்கமும் நீரே. மனிதனை ஆணும் பெண்ணுமாகப் படைத்தீர். திருமணத்தினால் குடும்பமாக வாழ அவர்களை இணைத்தீர். நீர் எம்மீது வைத்திருக்கும் அன்பின் வெளிப்பாடாகவும், தம்பதியர் ஒருவர் மீது ஒருவர் வைத்திருக்கும் அன்பின் அடையாளமாகவும் குடும்பங்களைக் குழந்தைச் செல்வத்தினால் ஆசீர்வதிக்கின்றீர். குழந்தையின்றித் தவித்த அன்னாள், எலிசபெத் ஆகியோரின் மீது மனமிரங்கி, அவர்களுக்குக் குழந்தை வரம் தந்தீர். அதுபோல, இன்று குழந்தையின்றித் தவிக்கும் தம்பதியர் ஒவ்வொருவர் மீதும் உமது கருணையைப் பொழியுமாறு நாங்கள் உம்மை வேண்டுகிறோம்.

இறைவா, உம்மால் ஆகாதது ஒன்றுமில்லை என்பதை நாங்கள் விசுவசிக்கின்றோம். இறந்த உடலுக்கு உயிர் கொடுக்கும் ஆற்றலும், வறண்ட நிலத்தை வளப்படுத்தும் வல்லமையும் நிறைந்தவர் நீர். எம் தாய் ஜீவ மாதாவின் பரிந்துரையின் வழியாக, குழந்தைப் பாக்கியம் வேண்டி நம்பிக்கையோடு உம் திருமுன் நிற்கும் இத்தம்பதியர் மீது மனமிரங்கி இவர்களுக்குக் குழந்தைப் பாக்கியம் தந்து ஆசீர்வதித்தருளும். உமது அருளால் இவர்கள் பெறும் குழந்தைகளைத் தெய்வ பயத்திலும், ஞானத்திலும், விசுவாசத்திலும், நற்பண்பிலும் வளர்க்கத் தேவையான ஆற்றலையும் அருளையும் தருவீராக. இதனால் நாங்கள் என்றும் உமக்கு நன்றியுள்ளவர்களாக வாழ்ந்து உம்மை மகிமைப்படுத்துவோமாக. எங்கள் ஆண்டவராகிய கிறிஸ்து வழியாக உம்மை மன்றாடுகின்றோம். ஆமென்.

**செப உதவிக்குத் தொடர்பு கொள்க**

அலைபேசி: 9176425061
மின் அஞ்சல்: jeevamatha2011@gmail.com, jeevamatha2011@hotmail.com
கடிதம்: Fr.Parish Priest
Parameswaran Nagar
Sholinganallur
Chennai – 119

வந்து செபித்துவிட்டு சென்றோம். டிசம்பர் மாதம் என் மருமகள் கருவுற்றாள். இப்போது அவளுக்கு இது 5ம் மாதம். குடும்பத்தோடு இங்கு வந்து நன்றி செலுத்திவிட்டு அன்னையின் அருட்காவரை சுகப்பிரசவத்திற்கு நாடி நிற்கின்றோம். ஜீவமாதாவுக்கு நன்றி.

**3. டயானா – இலங்கை**

நானும் என் குடும்பமும் இலங்கையில் ஒரு இடம் வாங்க வேண்டும் என்று நினைத்தோம். அதிக விலையின் காரணமாக எங்களால் அதை வாங்க முடியவில்லை. பின்பு இங்கு வந்து திருப்பலி ஒப்புக்கொடுத்து செபித்துவிட்டு சென்ற பிறகு அதே இடம் நாங்கள் எதிர்பார்த்த விலைக்கு கிடைத்தது. அன்னையின் பரிந்துரையால் கிடைத்த அந்த இடத்தில் ஜீவமாதாவுக்கு ஒரு அழகிய கெபி ஒன்று கட்டலாம் என்று முடிவு செய்திருக்கின்றோம். இந்த ஜீவமாதாவின் அருளை இலங்கையில் இருக்கும் அனைவரும் அனுபவிக்க எங்களால் முடிந்தவற்றை நாங்கள் செய்வோம். கோடி அற்புதங்கள் புரியும் ஜீவமாதாவுக்கு கோடி நன்றிகள். மரியே வாழ்க!

**4. ஜெயஸ்ரீகா – கூத்தவாக்கம்**

நான் ஒரு பிராமின் சகோதரி. எனக்கு அண்மைக் காலமாக உடல்நலம் குன்றியது. மருத்துவர்களிடம் சென்றபோது பல பிரச்சனைகளைச் சொல்லி என்னை பயமுறுத்தினார்கள். நம்பிக்கையோடு இங்கு வந்து செபித்தேன். நான் இந்துவாக இருந்தாலும் நம்பிக்கையோடு இங்கு வந்தேன். எனது குரலுக்கும் கடவுள் செவிசாய்த்து அதே மருத்துவர்களே என் உடலில் எந்தவிதக் குறையும் இல்லாமல் ஆரோக்கியமாக இருக்கின்றேன் என்று கூறிவிட்டார்கள். இயேசுவுக்கேப் புகழ்! மரியே வாழ்க!

**5. அருள்பணி. ராஜரத்தினம் – சென்னை**

நான் பெங்களூரில் படித்துக் கொண்டிருந்தபோது ஜூன் மாதம் ஒரு திருமணம் நடத்தி வைத்தேன். அவர்களிடம் ஜீவமாதாவின் படத்தைக் கொடுத்து உருக்கமாக வேண்டிக்கொள்ள சொன்னேன். அந்தப் பெண்ணும் இங்கு வராமலேயே அன்னையின் அருளால் கருவுற்றாள். இதில் அதிசயம் என்னவென்றால் இன்று காலையில்தான் அந்தப் பெண்ணுக்கு ஒரு அழகான பெண் குழந்தை பிறந்திருக்கின்றது. குழந்தை பாக்கியம் கொடுத்த ஜீவமாதாவுக்கு கோடி நன்றி!



மரிவழி இறைப்பணி

கொண்ட இறைவனின் வார்த்தையே நம்மில் இருந்து இயக்கிக் கொண்டிருக்கின்றது.

இவ்வுலகம் முழுவதும் கடவுளின் வார்த்தைகளால் படைக்கப்பட்டது போல நாமும் அவருடைய வார்த்தையால் வாழ்வு பெற்றுள்ளோம். இவ்வாறு வார்த்தையால் உண்டாக்கபட்ட நம் அனைவரிடமும் அதே உயிருள்ள வார்த்தைகள் இருக்கின்றன என்பதை கீழ்வரும் விவிலிய பகுதிகள் நமக்கு உணர்த்துகின்றன. 'என்ன பேசுவது, எப்படி பேசுவது என நீங்கள் கவலைப்பட வேண்டாம். நீங்கள் என்ன பேச வேண்டும் என்பது அந்நேரத்தில் உங்களுக்கு அருளப்படும். ஏனெனில், பேசுபவர் நீங்கள் அல்லர். மாறாக, உங்கள் தந்தையின் ஆவியாரே உங்கள் வழியாய்ப் பேசுவார்' (மத் 10:19-20); '''நாம் அதைக்கேட்டு நிறைவேற்றுமாறு, நமக்காக யார் விண்ணகத்துப் போய், அதைக் கொண்டு வருவார்' என்று நீ சொல்லாதவாறு, அது விண்ணில் இல்லை. 'நாம் அதைக்கேட்டு நிறைவேற்றுமாறு, நமக்காக யார் கடல்கடந்து சென்று, அதை நம்மிடம் கொண்டு வருவார்' என்று நீ சொல்லாதவாறு, அது கடல்களுக்கு அப்பால் இல்லை. ஆனால், நீ அதை நிறைவேற்றுமாறு வார்த்தை மிக அருகில் உள்ளது; உன் வாயில், உன் இதயத்தில் உள்ளது (இச. 31:12-14).

இறைவார்த்தையை நாம் அனைவரும் நம்மில் தாங்கியிருக்கின்றோம். அவ்வார்த்தையை நாம் எவ்வாறு வாழ வேண்டும் என்பதற்கு அன்னை மரியா மிகச்சிறந்த ஓர் எடுத்துக்காட்டாகத் திகழ்கின்றார். எவ்வாறெனில், 'நான் ஆண்டவரின் அடிமை; உம் சொற்படியே எனக்கு நிகழட்டும்' (லூக் 1:38) என்று தன் வார்த்தையின் மூலம் இறைவார்த்தைக்கு தனது உதரத்தில் உருகொடுக்க, வார்த்தை மனுவுருவாகி; நம்மோடு வாழ முழுமனதுடன் சம்மதிக்கிறார். அதோடு நின்றுவிடாமல், அவரிடம் சொல்லப்பட்ட அனைத்தையும் மனதில் இருத்தி தியானித்தி வந்தார் (லூக் 2:19,51).

அன்பார்ந்தவர்களே! நாமும் இறைவனது வார்த்தையை நம்மில் தாங்கியுள்ளோம். ஆம், இறைவனிடமிருந்து வருகின்ற வார்த்தை எவ்வாறு அவரது விருப்பத்தை நிறைவேற்றாமல் அவரிடம் திரும்பிச் செல்வதில்லையோ, நாமும் நம்மில் தாங்கியுள்ள இறைவார்த்தையை அறிந்து அதை நிறைவேற்றாமல் அவரிடம் திரும்ப முடியாது. அன்னை மரியாவைப் போல இறைவார்த்தைக்குச் செயல்வடிவம் கொடுக்க முற்படுகின்றபோது அது பிறருக்கு வாழ்வு தரக்கூடியதாக இருக்கும். இல்லையெனில், நமது வார்த்தைகளால் பிறர் மனதைப் புண்படுத்தி நாமும் பிறரும் மகிழ்ச்சியாக வாழ முடியாத சூழ்நிலை நம்மில் உருவாகும். இறைவார்த்தையை நம் வாழ்வில், நம் உள்ளத்தில் உய்த்துணர்ந்து அதன்படி அன்னை மரியாவைப் போல அர்த்தமுள்ள வாழ்வை வாழ முயற்சி செய்வோம். அன்னை மரியா தொடர்ந்து நமக்காகப் பரிந்து பேசுவாராக!



# மனுக்குல மாண்பு மரியா

16

அருள்பணி. ஜான் ரொன்காலி ம.ஊ.ச.
ஜெகன் மாதா பிரையரி, திருச்சி.

## மாதாவுக்கென மாண்புள்ள நேரம் ஒதுக்குவோம்

மே மாதம். தேவதாயின் வணக்க மாதம். திருச்சபையில் ஒவ்வொரு ஆண்டும் பல மாதங்கள் மாதாவின் மாதங்களாகக் கொண்டாடப்பட்டுவந்தாலும், மே மாத வணக்கம்தான் மிக முக்கியமானதாகவும், தாக்கம் நிறைந்ததாகவும் அமைந்திருக்கின்றது என்பதே உண்மை.

விவசாயமும், சிறுதொழில்களும் மட்டுமே முக்கியமாக இருந்தவேளைகளில், ஊர்களில் இந்த பக்தி நிகழ்வுகள் சாத்தியமே. தேவைகள் குறைவாயிருந்தன, மக்களுக்கு ஆடம்பரமும் அவசியமில்லாமலிருந்தது. அன்பும் உறவும் பிரதானமாயிருந்த சூழ்நிலையில், ஆண்டவனைத் தேடுவதும் சாத்தியமாயிருந்தது.

அன்று, மனஅழுத்தம் தரும் காரியங்கள் அதிகமில்லை. புல தலைமுறைகளும் ஒரே குடும்பமாகச் சேர்ந்து வாழ்ந்ததில் பிரச்சினைகளும் அதிகமில்லை. பகிர்வுகள் சாத்தியமானதில், பரவசங்களே சுகங்களாயிருந்தன. பாசாங்குகளும், போலிகளும் என்னவென்றே அறிந்திராத உலகமாக இருந்தது. அத்தனையும் இன்று மாறிப்போய், எதார்த்தங்கள் மறைந்த செயற்கைகளும், இயந்திரத்தனமான எச்சரிக்கைகளும் இன்று மனிதனை ஒரு மயக்கநிலையிலேயே நடத்துகின்றன.

இச்சூழ்நிலையில் ஒரேயொரு காரியம் மட்டுமே மனிதனை மாண்புள்ளவனாக வாழவைக்கமுடியும். அது அவனது ஆன்மீகத் தாகம் மட்டுமே. இறைவனுக்கு முன்பாக ஒருவன் நேரியவனாகவும், வாய்மையானவனாகவும் வாழ்கின்றபோதுதான் அவனது அனுபவங்கள் அர்த்தமும் ஆழமும் பெறுகின்றன. இதனைத்தான் "அன்னை மரியாள் அனைத்தையும் தன் உள்ளத்திலிருத்திச் சிந்தித்தவளாகவும், செயல்படுத்துபவளாகவும் வாழ்ந்து சிறந்தாள்"என்று பார்க்கின்றோம். அதிலும் குறிப்பாக இந்த ஆண்டு நம் திருத்தந்தை அன்னை மரியாளுக்கென "அன்னை மரியாள், திருச்சபையின் தாய்." என்ற தலைப்பில் ஓர் புதிய திருவிழாவை சிறப்பாகக் கொண்டாடவேண்டுமென திருச்சபை முழுமைக்கும் அழைப்பு விடுத்திருக்கின்றார்.

தூய ஆவியாரின் வருகைப் பெருவிழாவிற்கு அடுத்த நாள், அன்னை மரியாள் திருச்சபையின் தாய் என்னும் தலைப்பில் விழாக்கொண்டாடுகின்றோம். மரியாள் திருச்சபையின் தாய் என்பது திடீரென்று தோன்றிய ஒரு கருத்துரு அல்ல. மாறாக திருச்சபையின் தொடக்க காலம் முதலே அன்னை மரியாள் திருச்சபையின் வாழ்வோடும், பணியோடும் ஒன்றறக்கலந்திருக்கின்றாள். வரலாற்றில் பரவலாகவே நினைவுகூரப்பட்டு, கொண்டாடப்பட்டு வந்திருக்கும் ஓர் உணர்வுப்பூர்வமான விழா இது.







## ஜீவ மாதாவிடம் ஜீவன் வேண்டி



அருள்பணி. ஸ்டீபன்ராஜ்
ம. ஊ. ச.
சென்னை

**"நீர் நினைப்பது கை கூடும்; உம் வழிகள் ஒளிமயமாகும்" (யோபு 22:28).**

அன்புக்குரிய ஜீவமாதாவின் பக்தர்களே! ஏப்ரல் மாதம் 7 ஆம் தேதி மாதத்தின் முதல் சனிக்கிழமை. அன்று குழந்தை வரம் பெற்றுத்தரும் ஜீவமாதாவுக்கு ஒப்புக்கொடுக்கப்பட்ட நாள் ஏராளமான பக்தர்கள் தங்கள் குடும்பங்களோடு ஆலயத்திற்கு வந்து, செபமாலை செபித்து, சாட்சிகள் பகிர்ந்துகொண்டு, குணமளிக்கும் ஆராதனையில் பக்தியோடு கலந்துகொண்டனர். அருள்பணி அந்தோணிராஜ் ம. ஊ. ச அவர்கள் தலைமையில் நிகழ்ந்த கூட்டுத் திருப்பலியில் பக்தர்கள் அனைவரும் பக்தியோடு கலந்து கொண்டனர். இறைவனின் வல்லமையும் ஆசியையும் அன்னையின் பரிந்துரை வழியாகப் பலரும் தங்கள் வாழ்வில் நாளுக்குநாள் அனுபவித்து வருகின்றார்கள். இதற்கு சான்றாக ஒருசில சாட்சியப் பகிர்வுகள்:

**1. சுகுணா (அமலா) – சேலம்**

என் மகளுக்குத் திருமணமாகி 9 வருடங்களாகக் குழந்தை இல்லை. இதனால் மிகுந்த மனக்கவலையோடும் கண்ணீரோடும் வந்து வேண்டினோம். இப்போது என் மகளுக்கு ஒரு ஆண் குழந்தை பிறந்திருக்கிறது. ஜீவமாதாவின் மகிமையே, மகிமை! எங்களது கண்ணீரையும் கவலைகளையும் போக்கிய ஜீவமாதாவுக்கு கோடி நன்றிகள். மரியே வாழ்க!

**2. இருதயராஜ், மேரி – சென்னை**

என் மகனுக்குத் திருமணமாகி இரண்டரை வருடங்களாகியும் குழந்தையில்லாமல் இருந்தார். இந்த நிலையில் ஜீவமாதாவைப் பற்றிக் கேள்விப்பட்டு நாங்கள் குடும்பத்தோடு கடந்த அக்டோபர் மாதம்

முன்னதாகவே முன்பதிவு செய்யப்பட்டிருக்கும். மற்றபடி வருகின்ற மக்களுக்கு பெரிய அறைகள் (விடுதிகள்) தரப்பட்டன. அதில் அனைவரும் தங்கவேண்டியிருந்தது. மரியா ஏற்கனவே பேறுகால வேதனையோடு இருக்கிறார். நிச்சயம் அவருக்கு தனித்த இடம் தேவைப்பட்டது. எல்லாருடனும் விடுதியில் தங்க இயலாது. ஆகவே, மரியா யோசேப்புடன் அங்கு காணப்பட்ட ஏதோ ஒரு மாட்டுத் தொழுவத்தில் தஞ்சம் புகுகிறார்.

மரியா மேற்கொண்ட பயணங்கள் ஒவ்வொன்றும் பல்வேறு படிப்பினைகளை மரியாவுக்கு தந்திருக்கும். தந்தை கடவுளின் திட்டத்திற்கு தம்மையே அர்ப்பணித்துக்கொள்ளும் மரியாவின் அற்புத முயற்சியில் மரியா இன்னும் அதிக விசுவாசத்தோடு நடைபோட, எதிர்வரும் தடைகளை துணிவுடன் மேற்கொள்ள அவருக்கு இந்தப் பயணங்கள் ஒவ்வொன்றும் உறுதுணையாக இருந்தன என்று சொன்னால் அது மிகையாகாது.

நாம் நமது வாழ்க்கையில் பல்வேறு துன்பங்கள், சோதனைகள், சவால்கள், வேலைப் பளு என்று சோர்ந்திருக்கும்போது, கவலைகளால் கலங்கி நிற்கின்றபோது, குற்ற உணர்ச்சிகளால் காயப்பட்டிருக்கும்போது, தோல்விகளால் துரத்தப்படும்போது வாழ்க்கையை, ஏன் கடவுளையும்கூட நொந்துகொள்கிறோம். ஏற்கனவே இருக்கும் துன்பங்களையே தாங்க முடியாமல் தவிக்கின்போது இன்னும் அதிகமான துன்பங்களை நாம் சந்திக்க வேண்டிய சூழ்நிலை ஏற்படும்போது நாம் வாழ்வை வெறுத்துவிடுகிறோம், வாழ்வு தந்தவரை வசைபாடுகிறோம், பிறரை நொந்துக் கொள்கிறோம். மரியா நமக்கெல்லாம் வாழ்க்கைப் பாடம் சொல்லித் தருகின்றார்.

மரியாவைப்போல, துன்பங்களுக்குமேல் துன்பங்கள் நம்மை வந்து சூழ்ந்தாலும், கொஞ்சமும் தளர்ந்து விடாமல், தாழ்ச்சியுடையவராக வாழவும், தான் என்னும் அகந்தையை விடுக்கவும், இவை எல்லாவற்றிக்கும் மத்தியிலும் பொறுமை பணிவு, கீழ்படிதல் உள்ளவர்களாக வாழவும் கற்றுக்கொள்வோம்.



தொடர்ந்து பயணிப்போம்...







ஆதிகாலத் திருச்சபையின் விசுவாசத்தைப் புரிந்து, மக்களுக்கும் தங்கள் மாண்புமிக்க மறையுரைகளாலும். படிப்பினைகளாலும் உணர்த்திய திரு அவைத் தந்தையர்கள் பலரும் அன்னை மரியாளைத் திருச்சபைக்கு இணையாக, துணையாக, தூண்டுகோலாகக் காட்டுவதில் தயக்கம் கொள்ளவில்லை. தொடக்ககாலத் திரு அவையின் முதல் அனுபவசாலிகளான மேலறை விசுவாசிகள் (திருத்தூதர்களும், சீடர்களும், அங்கிருந்த பெண் சீடர்களும்கூட) அத்தனை பேரையும் அழகான ஆழமான விசுவாசத்திலே அரவணைத்துக் காத்து, அற்புதமாக ஒருங்கிணைத்தவள் அன்னை மரியாள்.

இயேசு இறந்தது முதல், உயர்த்த பின் விண்ணகமும்சென்று திடப்படுத்துபவரான தூய ஆவியாரின் வருகை வரையிலும் அவர்களைத் தளரவிடாமல் தனித்துவமான நம்பிக்கையோடு காத்து நின்றவள் அன்னை மரியாள். இன்று எத்தனையோ பிளவுகள், பிரிவுகள், குழுக்கள் என்று பிரிந்து தாய்த் திரு அவையையும், தாய்க்கெல்லாம் தாயான அன்னை மரியாளையும் வெறுத்தும், வேண்டாமென்றும் உதறித் தள்ளிவிடும் போதகர்கள், தாம் பெற்றுக்கொண்ட விசுவாசமே அன்னை மரியாள் கட்டிக்காத்த விசுவாசத்தின் மிச்சம்தான் என்பதைப் புரியாததனால்தான் என்பது என் அழுத்தமான கருத்து.

அன்னை மரியாள் அனைவரையும் அரவணைப்பவள் மட்டுமல்ல, தன் மகன் இயேசுவைப்போலவே, தந்தையே இவர்கள் அறியாமல் செய்கிறார்கள், இவர்களை மன்னியும் என்று மன்றாடி மன்னிப்பையும் பெற்றுத்தரும் தாய். இவை குறித்து அடுத்து வருகின்ற தொடரிலே பார்க்கலாம்.

மே மாதம். இது, அன்னையின் மாதம். காலை மாலை ஆலயம் சென்று, அன்னையின் புகழ்மாலை ஜெபித்து அவள் துணைபெறும் அருளின் காலம். அன்னைக்கென ஒதுக்கும் காலம், அழகாகப் பயன்படுத்தப்படுகின்றபோது, அனைவரின் வாழ்க்கையும் அழகுபெறுகின்றது. அன்னையை அணுகிவரும்போது, அழகின் முழுமையான மரியாள் நம்மையும் தன் அழகின் நிறைவிலே இணைத்துக்காப்பாள். அன்னையின் வழியாக இறைவனை நாம் நெருங்கிவந்து, அவள் புகழ் பாடும்போது, அருள்வரங்களை ஆசீர்வாதங்களாக அனுபவிப்போம். வாழ்க, வாழ்க, அம்மா நீ வாழ்க.



# மே மாதம் - மரியின் மாதம்

அருள்பணி. டெனிஸ் ம.ஊ.ச.,, உரோமை.

மே மாதம் வந்துவிட்டாலே, பள்ளி செல்லும் மாணவ மாணவியருக்கும், ஆசிரியர்களுக்கும் விடுமுறை! வீட்டில் பெற்றோர் தங்களது குழந்தைச் செல்வங்களை விடுமுறைக்கு பல்வேறு இடங்களுக்கும், சுற்றுலா மையங்களுக்கும் இட்டுச் செல்வதோடு, கோடை விவிலியப்பள்ளி, பங்குத் திருவிழாக்கள், குடும்பக் கொண்டாட்டங்கள், திருமணங்கள், குருப்பட்ட விழாக்கள் என்று பல்வேறு கொண்டாட்டங்களை, கோடை வெயிலின் கொடூரத்தையும் பார்க்காமல், விழாக்களின் இன்ப மழையில் நனைந்து உள்ளம் மகிழ வாழும் ஒரு உறவின் காலம்தான் மே மாதம்.

இந்த மே மாதத்தில் தனிச்சிறப்புமிக்க மரியின் வழிபாட்டு பக்திமுயற்சி ஒன்றை நமது திரு அவை பாரம்பரியமாகக் கொண்டாடி வருவது நம் அனைவருக்கும் தெரிந்த ஒரு உண்மை. மே மாதம் என்றாலே அன்னை மரியாவிற்கு ஒப்புக்கொடுக்கப்பட்ட மாதம் என்பதை நம்மால் மறக்க முடியாது. ஏறக்குறைய எல்லாப் பங்குத்தளங்களிலும், தினமும் மரியன்னையின் செபமாலையை பக்தியோடு, மரியாவின் பிரார்த்தனை பாடி பல்வேறு விழாக்களை அன்னை மரியாவுக்காக கொண்டாடி மகிழும் மாதம் மே மாதம்.

**ஏன் மே மாதம்?**

ஒவ்வொரு ஆண்டிலும் 12 மாதங்கள் இருக்கையில், மே மாதம் ஏன் அன்னை மரியாவுக்காக சிறப்பாக ஒப்புக்கொடுக்கப்படுகின்றது? மே மாதத்திற்கும் அன்னை மரியாவிற்கும் ஏதாவது நெருங்கிய தொடர்பு உள்ளதா? என்று நம்மில் பலர் சந்தித்திருக்கலாம்.

இந்த கேள்விகளுக்கு விடை காண வேண்டுமெனில் திரு அவையின் வரலாற்றை சிறிது பின்னோக்கிப் பார்க்க வேண்டும். மே மாதத்தை அன்னை மரியின் மாதமாக திரு அவை ஒப்புக்கொடுத்திருப்பதன் வரலாற்றுப் பின்னணியும் அதன் காரணங்களும் பல உள்ளன. ஆனால், அவற்றின் முக்கியமான ஒருசில கருத்துக்களைப் பற்றி மட்டும் நாம் இப்போது வரிசைப்படுத்திப் பார்க்கலாம்.

**1. காலங்களில் அவள் வசந்தம்**

ஐரோப்பிய மேலை நாடுகளில் மே மாதம், வசந்த காலத்தின் உச்சக்கட்டமான அருமையான ஒரு மாதம். உடல் நடுங்க வைக்கும் உறைபனி மறைந்து, சூரியனின் செங்கதிர்களால, பச்சைப்பசேலென செடி கொடிகள் வளர்ந்து, பூத்துக் குலுங்கும் வசந்த காலம் மே மாதம். மரியாவை ஒரு விண்ணக ரோசாவாக வருணித்து, "Flora Mater" என்று





இருந்தது. அதுவும் 2500 அடிகளுக்கும் அதிகமான உயரத்தைக் கொண்ட மலைமேல் அமைந்திருந்த ஓர் ஊர். மலைகளும் குன்றுகளும் நிறைந்திருந்த பாதை. திருடர்களும், கொள்ளையர்களும் வழிமறிக்கும் வாய்ப்புகள் அதிகம் நிறைந்திருந்த ஒரு பாதை. ஏறக்குறைய 3 லிருந்து 4 நாட்கள் பயணம். மரியா கருவுற்று ஏறக்குறைய தமது ஒன்பதாம் மாதத்தில் இருக்கிறார். அது மழைக்காலமாக இருந்திருக்கவும் வாய்ப்புள்ளது. கருவுற்றிருக்கும் வேளையில் பயணம் மேற்கொள்வதே சிரமங்கள் நிறைந்தது. அதுவும் மேற்குறிப்பிட்ட அசாதாரண சூழ்நிலையில் பயணம் மேற்கொள்வது என்பது அபாயகரமானது.

இதுபோன்ற கருத்தரித்திருக்கும் தருணங்களில் எந்தப் பெண்ணும் தன்வீட்டில் தன்னுடைய சொந்த பந்தங்களோடு இருப்பதையே விரும்புவாள். ஆனால் மரியா இந்தப் பயணத்தை மேற்கொள்ள வேண்டியிருந்தது. மரியாவின் உள்ளம் என்னவெல்லாம் நினைத்திருக்கும்? உடலளவில் மிகவும் சோர்ந்து காணப்பட்ட ஒரு தருணம், பெத்லகேமில் பேறுகாலத்தின்போது உடனிருக்க பணிப்பெண்கள் யாரையும் தெரியாது, தங்களுடைய நாட்டை விட்டு வேறொரு நாட்டில் தம் மகன் பிறக்கும்படி ஆகிவிட்டதே என்ற சிந்தனை ஆகியவை மரியாவை ஆட்கொண்டிருந்திருக்கும்.

கடவுள் ஏன் தனக்கு இப்படி செய்ய வேண்டும் என்று நினைத்திருப்பாரோ? அவரின் திட்டத்திற்கு ஆம் என்று பணிந்தது முதல் எத்தனை துன்பங்கள்! திருமணத்திற்கு முன்பே கருத்தரித்ததால் ஊராரின் ஏளனப் பேச்சுகளுக்கு ஆளாக வேண்டிய நிலைமை. யோசேப்புடன் திருமணம் நடந்தேறியபோது கர்ப்பிணிப் பெண்ணாக இருந்ததால் எதிர்கொண்ட அவமானங்கள் என்று எல்லா துன்பங்களையும் சந்தித்தாயிற்று. இதெல்லாம் போதாதென்று இப்போது தான் ஆவலோடு காத்துக்கொண்டிருந்து தமது செல்ல மகனின் பிறப்பையும் வேறொரு நாட்டில் நிகழ்த்துகிறாரே இந்தக் கடவுள் என்று மரியா உள்ளம் குமுறியிருப்பாரோ?. மன்னரின் மனதை இறைவன் மாற்றியிருக்கக் கூடாதா, தன்னை இந்த துன்பத்திலிருந்து காத்திருக்கக் கூடாதா? என்று மரியா கதறியிருப்பாரோ?

ஆனால், இந்த கடினமான, அபாயங்கள் நிறைந்த இப்பயணத்தை மேற்கொள்ள மரியாவுக்கு துணிவு இருந்தது. இறைவனை நம்பி, தனது துணையாளரான யோசேப்பின் கரம்பற்றி பயணம் செய்கிறார். எலிசபெத்தைக் காணச் சென்றபோது தனியாக சென்ற மரியாவுக்கு இப்போது பயணத்தில் துணையாய் யோசேப்பு.

ஒருவழியாக கரடு முரடான பயணத்திற்குப்பின் மரியாவும் யோசேப்பும் பெத்லகேம் சென்று சேருகிறார்கள். அங்கு சென்றவுடன் அவர்கள் தங்குவற்காக இடம் தேடுகின்றனர். இதுபோன்று பல்வேறு ஊர்களிலிருந்து பெத்லகேம் நோக்கி வருபவர்கள் ஏராளமானோர் இருந்தனர். தங்குவதற்கான வசதிகள் அங்கு மிக மிகக் குறைவாகவே இருந்தது. தங்களுக்கு தேவையான அனைத்தையும் அவரவர் கொண்டுவர வேண்டும். தனி அறைகள் மிகக்குறைவாகவே இருந்திருக்கக் கூடும். அவைகளும்



# அன்னை மரியாவின் திருப்பயணங்கள் 6

அருள்பணி. ஜான் ஜோசப் ம.ஊ.ச., குழந்தை இயேசு ஆலயம், சென்னை.

## பயணம் நான்கு: அன்னை மரியா கணக்கெடுப்பிற்காக பேறுகால வேதனையோடு பெத்லகேம் நோக்கி மேற்கொண்ட பயணம்

'அக்காலத்தில் அகுஸ்து சீசர் தம் பேரரசு முழுவதும் மக்கள் தொகையைக் கணக்கிடுமாறு கட்டளை பிறப்பித்தார். அதன்படி சிரிய நாட்டில் குரேனியு என்பவர் ஆளுநராய் இருந்தபோது முதன்முறையாக மக்கள் தொகை கணக்கிடப்பட்டது. தம் பெயரைப் பதிவு செய்ய அனைவரும் அவரவர் ஊருக்குச் சென்றனர். தாவீதின் வழிமரபினரான யோசேப்பும், தமக்கு மண ஒப்பந்தமான மரியாவோடு, பெயரைப் பதிவு செய்ய, கலிலேயாவிலுள்ள நாசரேத்து ஊரிலிருந்து யூதேயாவிலுள்ள பெத்லகேம் என்ற தாவீதின் ஊருக்குச் சென்றார். மரியா கருவுற்றிருந்தார். அவர்கள் அங்கு இருந்தபொழுது மரியாவுக்குப் பேறுகாலம் வந்தது' (லூக்கா 2:1-6).

பெத்லகேம் ஒரு வளமிக்க பகுதி. பாலஸ்தீன நாட்டின் உணவுக் களஞ்சியமாகவும் அது இருந்தது. எபிரேய மொழியில் பெத்லகேம் என்றால் 'உணவின் வீடு' (House of Bread) என்று பொருள். எல்லா மக்களுக்கும் 'உயிரளிக்கும் உணவான' இயேசு இந்த 'உணவின் வீடாகிய' பெத்லகேமில் பிறந்தது மிகவும் பொருத்தமானதே.

இந்த பெத்லெகெமில்தான் முதுபெரும் தந்தை யாக்கோபு தம் மனைவி ராக்கேலை அடக்கம் செய்திருந்தார் (தொநூ 48:7, 35:20). இந்த ஊரில்தான் ரூத்து தம் கணவர் போவாசுடன் வாழ்ந்து வந்தார் (ரூத்து 1:22). இன்னும் சிறப்பாக, இந்த பெத்லகேம்தான், இஸ்ரயேலின் தலைசிறந்த அரசராக விளங்கிய தாவீதின் ஊராக இருந்தது (1சாமு 16:1, 17:12). தாவீதின் அரியணையில் அமரவிருந்த இயேசு தாவீதின் ஊராகிய பெத்லகேமில் பிறந்தது இறையருளே. இந்த பழமைமிக்க ஊரிலிருந்துதான் மெசியா தோன்றுவார் என்று இஸ்ரயேல் மக்கள் எதிர்பார்த்து காத்திருந்தார்கள்.

உரோமையர்கள் யூதர்களை ஆட்சி செய்துகொண்டிருந்த காலம் அது. ஏழை தம்பதியரான மரியாவும் யோசேப்பும் அரசின் ஆணைக்குக் கட்டுப்பட்டு நாசரேத்திலிருந்து தங்களின் பெயர்களை பதிவு செய்து கொள்வதற்காக பெத்லெகெமுக்கு பயணம் செய்கிறார்கள். நாசரேத்திலிருந்து பெத்லெகெம் ஏறக்குறைய 80 மைல் தூரத்தில்







அவருக்குப் பெயர்சூட்டி, அவள் 'காலங்களில் வசந்தம்' என்று மகிழ்ந்து, மே மாதத்தை விண்ணக ரோசாவாகிய மரியாவை, ரோசா மலர்கள் பூத்துக் குலுங்கும் மே மாதத்தோடு இணைத்துப் பார்த்து, மே மாதத்தை அன்னை மரியின் மாதமாக மேலைத் திரு அவை பாவித்ததாக ஒரு வரலாறு சொல்லப்படுகின்றது. அன்னை மரியா ஒரு வசந்தத்தின் முல்லை மலர். Mystical Rose எனப்படும் இறையருளின் நறுமணத்தை உலகெங்கும் பரவச் செய்யும் ஒரு ரோஜாத் தோட்டத்தின் விண்ணக நாயகி நமது அன்னை மரியா. எனவேதான் வசந்த காலமாகிய மே மாதத்தை அன்னை மரியாவுக்கு ஒப்புக்கொடுத்த மேலைத் திரு அவையின் பாரம்பரியம், நமது நாட்டுக் கத்தோலிக்கர்கள் நடுவிலும் வேகமாகப் பரவி, உலகம் முழுவதுமே மே மாதத்தை அன்னை மரியின் மாதமாக சிறப்பித்து வருவதை நாம் அனைவரும் அறிவோம்.

**2. பாஸ்கா காலத்தின் இறுதிக்கட்டம் - மே மாதம்**

ஒவ்வொரு ஆண்டும் இயேசுவின் உயிர்ப்பு விழா கொண்டாடப்பட்ட, 40 வது நாள் ஆண்டவரின் விண்ணேற்பு விழாக் கொண்டாடப்படுகிறது. உயிர்ப்பின் நாயகனாகிய இயேசுவின் பாடுகளிலும், இறப்பிலும் பங்குகொண்ட மரியா, தமது மகனின் உயிர்ப்பின் மகிமையிலும் பங்குகொண்டு நம் அனைவருக்கும் உயிர்ப்பின் மகிழ்ச்சியை முழுமையாக நமக்குப் பெற்றுத்தருபவர் அன்னை மரியா என்பதை புரிய வைப்பதற்காக, திரு அவை பாஸ்கா காலத்தின் உச்சக்கட்டமான மே மாதத்தில் அன்னை மரியாவை நினைவுகூர்ந்து அவரிடம் நம் மன்றாட்டுக்களைச் சமர்ப்பிப்பது மிகவும் பொருத்தமானது என்ற காரணத்திற்காகவும், மே மாதத்தில் அன்னை மரியாவின் சிறப்பு வழிபாடுகள் திரு அவையால் வலியுறுத்தப்படுகின்றன.

திருத்தூதர்பணிகள் 1:14 ல், அன்னை மரியா சீடர்களோடும், முதல் கிறிஸ்தவர்களோடும் இணைந்து செபித்து, தூய ஆவியாரின் வருகைக்காக காத்திருந்தார் என்று தூய லூக்கா எழுதியுள்ளார். எனவே, மே மாதம் நாம் கொண்டாடும் பெந்தகோஸ்தே விழாவிற்கும் அன்னை மரியாவின் பிரசன்னத்திற்கும் நெருங்கிய தொடர்பு உண்டு. எனவேதான், அண்மையில் திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள், பெந்தகோஸ்தே விழாவின் மறுநாளை "மரியா – திரு அவையின் அன்னை" என்ற விழாவாகக் கொண்டாட வேண்டுமென அறிவித்துள்ளார். இவ்வாறாக, பாஸ்கா காலத்தின் நிறைவை, அன்னை மரியாவின் விழாவோடு தொடர்புபடுத்திய காரணம், மே மாதத்தில்

அன்னை மரியாவிற்கு கொடுக்கப்படும் முக்கியத்துவத்தை நாம் புரிந்துகொள்ள உதவுகின்றது.

**3. மே மாதத்தில் மரி அன்னைக்கான விழாக்கள்**

மே மாதம் முழுவதையுமே, அன்னை மரியாவுக்காக திரு அவை ஒப்புக்கொடுத்த போதிலும், மூன்று முக்கியமான மரியன்னை விழாக்களை நாம் மறந்துவிட முடியாது. முதலாவதாக மே 13 ஆம் தேதி பாத்திமா நகரில் அன்னை மரியா 1917 ஆம் ஆண்டு முதன் முறையாக காட்சி கொடுத்தார். இந்த ஆண்டில் (2018) மே 21 ஆம் தேதி, பெந்தகோஸ்தே விழாவின் மறுநாள், அகில உலக திருஅவை முழுவதும் முதன்முறையாக 'Mater Ecclesiae' (திரு அவையின் அன்னை) என்ற விழாவைக் கொண்டாட இருக்கின்றது. மே 31 ஆம் நாள் அன்னை மரியா எலிசபெத்தம்மாளை சந்தித்த திருவிழா.

இந்தி விழாக்கள் மட்டுமல்ல, மே மாதத்தின் ஒவ்வொரு நாளுமே அன்னை மரியின் விழா நாள்தான்.

மே 2 – Our Lady of Oviedo, Spain (711)
மே 3 – Our Lady of Czestochowa
மே 5 – திருத்தூதர்களின் அரசி
மே 6 – அமைதியின் அரசி (உரோமை, 1483)
மே 8 – Our Lady of Pompei (Italy)
மே 9 – Our Lady of Loretto (Italy)
மே 10 – Our Lady of Savssaie (Paris, 1305)
மே 11 – (பிரேசிலின் பாதுகாவலி)
மே 13 – வேதசாட்சிகளின் அன்னை (உரோமை, 608)
மே 14 – Our Lady of Bavaria (1330)
மே 15 – Our Lady of France (1860)
மே 17 – கண்ணீரின் அன்னை (Spoleto, Italy, 533)
மே 21 – Vladimir அன்னை (Russia, 533)
மே 22 – Our Lady of Monte Vergine (Naples, Italy 1119)
மே 23 – Our Lady of Miracles of Brescia (Italy, 1478)
மே 24 – Our Lady, Help of Christians (16th Century)
மே 26 – Our Lady of Caravaggio (Italy 1432)
மே 27 – Our Lady of Naples (Italy, 533)
மே 30 – திரு இருதய அன்னை (Mexico, 1966)
மே 31 – எலிசபெத்தம்மாளைச் சந்தித்த விழா

**4. திருத்தந்தை 6 ஆம் சின்னப்பரின் சுற்றுமடல் (Mense Maio)**

1965 ஆம் ஆண்டு ஏப்ரல் 29 ஆம் நாள் திருத்தந்தை 6 ஆம் சின்னப்பர் Mense Maio என்ற சுற்று மடலை அகில உலகத் திரு அவைக்கு வெளியிட்டார். அந்தச் சுற்றுமடலில், மே மாதம் அன்னை மரியாவிற்காக ஒப்புக்கொடுக்கப்பட்ட மாதம் என்ற கருத்தினை மிகத் தெளிவாக வலியுறுத்தி, உலக அமைதிக்காக மே மாதம் முழுவதும் அன்னை மரியாவிடம் சிறப்பாக செபிக்க வேண்டுமென்று இறைமக்களுக்கு அறிவுறுத்தியுள்ளார்.





13) நம் சகோதரரும், கிறிஸ்துவைப் பற்றிய நற்செய்தியை அறிவிக்கும் கடவுளின் உடன் உழைப்பாளருமாகிய -------------- உங்களிடம் அனுப்பினோம்.
14) ஆண்டவர் நம்பிக்கைக்குரியவர். அவர் உங்களை உறுதிப்படுத்தி யாரிடமிருந்து காத்தருள்வார்?
15) யார் குறைச் சொல்லுக்கு ஆளாகாதவராயும், ஒரு மனைவி கொண்டவராயும், அறிவுத் தெளிவு, கட்டுப்பாடு, விருந்தோம்பல், கற்பிக்கும் ஆற்றல் ஆகியவற்றை உடையவராயும் இருக்க வேண்டும்?
16) கிறிஸ்து இயேசுவிடம் இணைந்து இறைப்பற்றுடன் வாழ விரும்புவோர் அனைவரும் என்ன பெறுவர்?
17) கடவுள் நம்மை ஒழுக்கக்கேட்டிற்கு அல்ல, வேறு எதற்கு அழைத்தார்?
18) உன்னைப்பற்றியும், உன் போதனையைப் பற்றியும் கருத்தாயிரு; அவைகளில் நிலைத்திரு; இவ்வாறு செய்தால் நீயும் ------------: உனக்குச் செவிசாய்ப்போரும் ----------------
19) ஏனெனில் நாங்கள் நற்செய்தியை உங்களுக்கு வெறும் சொல்லளவிலன்றி, யார் தரும் வல்லமையோடும் மிகுந்த உள்ள உறுதியோடும் கொண்டுவந்தோம்?
20) ஏனெனில் உங்களைத் துன்புறுத்துகிறவர்களுக்குத் துன்பத்தையும் துன்புறுத்தப்படும் உங்களுக்குத் துயர் நீக்கி அமைதியையும் எங்களோடு கைம்மாறாக அளிப்பது யாருடைய நீதியன்றே?

## சென்ற மாதத்தின் விடைகள்: கலாத்தியர், எபேசியர், பிலிப்பியர், கொலோசையர்

**1.** கலா 1:42; **2.** எபே 1:4; **3.** பிலி 1:29; **4.** கொலோ 1:715 **5.** கலா 6:11; **6.** எபே 6:11; **7.** 1பிலி 4:6; **8.** கொலோ 4:6; **9.** கலா 2:16; **10.** எபே 2:8; **11.** பிலி 2:6; **12.** கொலோ 2:3; **13.** கலா 3:7; **14.** எபே 3:11; **15.** பிலி 3:10; **16.** கொலோ 3:5-6; **17.** கலா 4:23; **18.** எபே 4:15; **19.** கலா 5:14; **20.** கலா 6:15

விடைகள் அனுப்ப இறுதி நாள் 25-05-2018

முகவரி

விவிலிய வினாடி வினா போட்டி
பதிப்பாசிரியர் "அப்படியே ஆகட்டும்"
ஜோதி மாதா ஆலயம்
5/301, மாதா கோயில் தெரு,
ஒக்கியம்பேட்டை, சென்னை - 97



# விவிலிய வினா விடை

**மே 2018**

***1,2* தெசலோனிக்கர்**

***1,2* திமொத்தேயு**

ச. பெ. அமல்ராஜ். ம.ஊ.ச.பொ.நி, திருச்சி - 21

1) நீங்கள் வானினின்று வரும் அவருடைய மகன் இயேசுவுக்காகக் காத்திருக்கிறீர்கள். அவரே வரப்போகும் சினத்திலிருந்து நம்மை மீட்பவர். இறந்த அவரையே தந்தை உயிர்த்தெழச் செய்தார். இது எந்த அதிகாரம்? எந்த வசனம்?

2) அந்நாளில் அவர் வரும்பொழுது இறைமக்கள் அவரை என்ன செய்வார்கள்?

3) நான் (பவுல்) கொடுத்த கட்டளையின் நோக்கம் என்ன?

4) கடவுள் நமக்குக் கோழையுள்ளத்தினை அல்ல, --------------- ----- ------------ ---------------கொண்ட உள்ளத்தையே வழங்கியுள்ளார்.

5) எவரும் தீமைக்குப் பதில் தீமை செய்யாதவாறு பார்த்துக் கொள்ளுங்கள். உங்களுள் ஒருவருக்கொருவர் மட்டுமன்றி, எல்லாருக்கும், எப்பொழுதும் நன்மை செய்யவே நாடுங்கள். இது எந்த அதிகாரம்? எந்த வசனம்?

6) சகோதர சகோதரிகளே! ------------ செய்வதில் நீங்கள் மனந்தளர வேண்டாம்.

7)இறைப்பற்று பெரும் ஆதாயம் தருவதுதான்: ஆனால் அது யாருக்கு தரும்?

8) நான் நல்லதொரு போராட்டத்தில் ஈடுபட்டேன். என் ஓட்டத்தை முடித்து விட்டேன். விசுவாசத்தைக் காத்துக் கொண்டேன். இதைக் கூறியது யார்?

9) கடவுளின் வார்த்தையை நீங்கள் எங்களிடமிருந்து கேட்டபோது அதை மனித வார்த்தையாக அல்ல, வேறு எவரின் வார்த்தையாகவே ஏற்றுக் கொண்டீர்கள்?

10) உண்மையைப் பற்றிக்கொண்டு வாழாது தீமையில் இன்பம் காணும் அனைவரும் எதற்கு உள்ளாவர்?

11) ஏனெனில் கடவுள் ஒருவரே. கடவுளுக்கும் மனிதருக்கும் இடையே இணைப்பாளரும் ஒருவரே. அவரே இயேசு கிறிஸ்து என்னும் மனிதர். இது எந்த அதிகாரம்? எந்த வசனம்?

12) படைவீரர் எவரும் பிழைப்புக்காகப் பிற அலுவல்களில் ஈடுபட மாட்டார். ஏன்?







**மே மாதத்தில் அன்னையின் கரம்பிடித்து வழிநடக்க சில பரிந்துரைகள்**

மே மாதம் எந்த காரணங்களுக்காக அன்னை மரியாவிற்கு ஒப்புக்கொடுக்கப்பட்டுள்ளது என்பதைப்பற்றி சிந்தித்து, மே மாத மரியன்னையின் விழாக்களைப் பட்டியிலிட்டுப் பார்த்த நாம், இப்போது, இந்த மே மாதத்தை பயனுள்ள முறையில் பொருள் உள்ள விதத்தில், மரியாவின் அருளோடு செலவிடலாம் என்பதற்காக ஒருசில எளிய பரிந்துரைகள்:

- தினசரி செபமாலை
- குடும்ப செபம்
- மரியன்னையின் திருத்தலங்களுக்குக் குடும்பமாகத் திருப்பயணம் செல்லுதல்
- மரியாவைப் பற்றிய விவிலியப் பகுதிகளை மே மாத விடுமுறை நாட்களில் வாசித்தல்
- மரியன்னை பக்தி சபைகளில் சேர முயற்சி செய்தல் (மரியின் ஊழியர் பொதுநிலையினர் குழுமம், மரியாயின் சேனை)
- மரியன்னையின் திருவிழாக்களைப் பங்குத்தளங்களில் கொண்டாடுதல்
- மரியன்னை பற்றிய கருத்தரங்குள் (பங்கு மறைமாவட்ட அளவுகளில்) நடத்துவதற்காக ஏற்பாடு செய்தல்
- மரியன்னையின் மாத பத்திரிக்கைகளை நாம் வாங்குவதோடு, பிறரையும் வாங்கி படிக்க ஊக்குவித்தல் (அப்படியே ஆகட்டும், வேளாங்கண்ணி குரல்...)
- பெற்றோர் தம் குழந்தைகளின் இதயங்களில் மரியன்னையின் பக்தியை வளரச் செய்தல்.
- பங்குத்தந்தையர்கள் இறைமக்களுக்கு சரியான மரியியல் மறைக்கல்வி கற்பித்தல்.
- மரியன்னை பற்றிய உரையாடல்களுக்கு பிற கிறிஸ்தவ சபையினரை வரவழைத்து உறவை வளர்த்தல்.
- யூத மதம், இஸ்லாம் மதம் ஆகிய மறைகளில் மரியாவைப் பற்றிய கருத்துக்கள் என்ன என்பதை அறிந்துகொள்ள ஆர்வம் காட்டுதல்.

**திருத்தந்தையின் தேவதாய்ச் சிந்தனைகள்**



அருள்பணி. அமல்
ம.ஊ.ச.
உரோமை

## மரியாள் எப்பொழுதும் சிறப்பான விதத்தில் வணங்கப்படுகிறாள்

திரு அவையானது, அதன் தொடக்கத்திலிருந்தே, அனைத்துலகத்திற்கும் தாயான கன்னி மரியாளுக்கென்று நம்பிக்கையாளர்களின் இதயத்திலும் பக்தியிலும் சிறப்பானதொரு இடத்தை தந்திருக்கிறது.

மரியன்னை பக்தியின் சிறப்புப் பண்பு பற்றி இரண்டாம் வத்திக்கான் சங்கம் இவ்வாறு கூறுகின்றது: "திரு அவை மரியாவைத் தனிப்பட்டதொரு வணக்கத்தால் தக்க காரணத்துடன் பெருமைப்படுத்துகிறது. ஏனெனில், தம் மகனுக்குப் பிறகு, எல்லா வானதூதர்களுக்கும் மனிதர்களுக்கும் மேலாகக் கடவுளின் அருளால் உயர்த்தப்பட்டவரும், கிறிஸ்துவின் மறைநிகழ்ச்சிகளில் பங்கெடுத்தவருமாகிய இவர் கடவுளின் தூய்மைமிகு தாய் ஆவார். தூய கன்னியை தொடக்க முதலே, நம்பிக்கை கொண்டோர் 'கடவுளின் தாய்' என்றழைத்து வணங்கினர். தங்கள் துன்பங்கள், தேவைகள் அனைத்திலும் அவரை மன்றாடி, அவரது அடைக்கலத்தில் புகலடைந்திருக்கின்றனர்" (*Lumen gentium,* n. 66).

1. 'காலம் நிறைவேறியபோது திருச்சட்டத்திற்கு உட்பட்டிருந்த நம்மை மீட்டுத் தம் பிள்ளைகள் ஆக்குமாறு கடவுள் தம் மகனைப் பெண்ணிடம் பிறந்தவராகவும் திருச்சட்டத்திற்கு உட்பட்டவராகவும் அனுப்பினார்' (கலா 4:4). புனிதர் பவுல் அடிகளார் நினைவுகூர்வதைப்போன்று, இறைமகனுடைய மனிதத் தன்மையை எப்பொழுதும் நாசரேத்து மரியாள் என்ற ஒரு பெண்ணோடு இணைத்துப் பார்க்கின்ற வகையில், மரியாள் பக்தியானது அதிசயிக்கத்தக்க இறைத்திட்டத்தை அடிப்படையாகக் கொண்டதாக இருக்கின்றது.

இறையன்னையின் மறைபொருள் மற்றும் மீட்புத் திட்டத்தில் மரியாளுடைய ஒத்துழைப்பானது, மீட்பராம் இயேசுவையும் மீட்புத்திட்டத்தில் ஒத்துழைத்ததால் குறித்தநேரத்தில் நேரத்தில் அவரைப் பெற்றெடுத்தவரையும் எக்காலமும் புகழ்கின்ற மனநிலையை நம்பிக்கையாளர்களில் ஏற்படுத்தியிருக்கிறது.

கன்னி மரியாள் மீதான நம்பிக்கையாளர்களுடைய அன்பிற்கான மற்றுமொரு காரணம் அவருடைய உலகனைத்திற்கும் தாய் எனற







இயேசுவின் பாடுகள் இறைவனின் மீட்புத்திட்டத்தின் ஒரு அங்கமாக இருந்தாலும் துன்பத்தை வளர்ச்சியின் ஒரு பகுதியாக ஏற்றுக் கொள்பவர்கள் ஒரு சிலரே. பலர் துன்பங்கள் வந்தவுடன் அதைவிட்டு எப்படியாகிலும் தூர சென்றுவிட வேண்டும் என்று முயற்சிப்பார்கள். இயேசுவின் சீடர்கள் அதற்கு விதிவிலக்கல்ல. உம்மை விட்டு விலகவே மாட்டேன் என்று சொன்ன திருத்தூதர்கள் துன்ப நேரத்தில் தப்பி ஓடுவதிலே குறியாய் இருந்தார்கள். ஓடிப் போனவுடன் தவறு செய்துவிட்டோம் என்று வருந்தினார்கள். இயேசுவின் சிலுவை மரணத்திற்கு பிறகு குற்றப்பலி உணர்வால் பீடிக்கப்பட்டு கூனி குறுகி தங்களது இல்லங்களிலே முடங்கிப் போனார்கள். முடங்கிப் போனவர்களை ஒன்று சேர்த்து அவர்களை இயேசுவின் இறையாட்சிக் கனவை நனவாக்குதே தங்களின் வாழ்வின் குறிக்கோளும் இலக்கும் என்பதை உணரச் செய்தவர் அன்னை மரியா. அவர்கள் ஒன்றித்து இருந்த காரணத்தால் இறைவனின் கொடையாம் தூய ஆவியாரை அவர்கள் பெறக் காரணமாக இருந்தவர். ஆவியாரின் அடிப்படைக் கொடையே மகிழ்ச்சி என்பதாம். மகிழ்ச்சியை தனதுள்ளத்தில் கொண்டுள்ள எவரும் எப்போதும் அதை பிறருக்கு பகிர்ந்து அளிப்பதில் முனைப்பாய் இருப்பார்கள்.

மீட்பரின் பிறப்பு அறிவிப்பின் போது முதன் முறை ஆவியாரால் ஆட்கொள்ளப்பட்டு இறைவனின் மகனை ஈன்றெடுத்தார் அன்னை மரியா. இயேசு உயிர்த்தார் என்கிற மகிழ்ச்சி செய்தியை அறிந்த அன்னை மரியா தம் எதிர்நோக்கும் நம்பிக்கையும் முழுமையுற்றதை அறிந்து ஒடுங்கிக் கிடந்தவர்களை ஒன்று சேர்த்தார். இயேசுவின் உயிர்ப்பின் நற்செய்தியையும், இறையாட்சி விழுமியங்களையும், நிலைவாழ்வின் நம்பிக்கையையும் ஆண்டவரின் கட்டளை படி அனைவருக்கும் அறிவிக்க திருத்தூதர்களைத் தயார் செய்து ஆவியால் ஆட்கொள்ள உறுதுணையாயிருக்கிறார்.

அன்னையால் ஒன்று சேர்க்கப்பட்டவர்கள், தூய ஆவியாரைக் கொடையாக பெற்றவர்கள் மகிழ்ச்சி நிறைந்த உள்ளத்தோடு எட்டுத் திக்கும் சென்று மகிழ்ச்சியின் செய்தியாம் இயேசுவின் உயிர்ப்பை அறிவித்தார்கள். அன்னையின் பிள்ளைகளான நாமும் உயிர்ப்பின் மகிழ்ச்சியை நமதாக்கிக் கொள்வோம். "யான் பெற்ற இன்பம் பெறுக இவ்வையகம்" என்பதற்கேற்ப நாம் பெற்ற மகிழ்ச்சியை அன்னை மரியாவைப் போல பிறரோடு பகிர்ந்து வாழ்வோம்.

# தூய ஆவியாரில் மகிழும் தாய் மரியா

அருள்பணி. சகாயராஜ் ம.ஊ.ச., ஜெகன் மாதா பிரையரி, திருச்சி

மகிழ்ச்சி நாம் ஒவ்வொருவரும் விரும்பி தேடும் ஒரு உணர்வு. ஒரு சிலர் தங்களின் உடல் நலம் குறித்து மகிழ்வர். ஒரு சிலரோ செல்வம், கல்வி, பதவி என்பன குறித்து மகிழ்வர். ஆனால், உறவுகளைக் குறித்து மகிழ்வோரின் எண்ணிக்கையை விரல் விட்டு எண்ணிவிடலாம். அதிலும் இறைவனின் பிரசன்னத்தையும், அருள் துணையையும் எண்ணி மகிழ்வோர் பேறுபெற்றோரே.

மரியா எளிய குடும்பத்தைச் சார்ந்த ஒரு சராசரி பெண். ஆனால் சமயப்பற்றிலும், திருமறைப் பாரம்பரியத்திலும் ஆழமாக வேரூன்றியிருந்தவர். படிப்படியாகப் பக்குவப்பட்டு இறைவனின் திட்டத்தில் நம்பிக்கை கொண்டு வாழ்ந்தவருக்கு இறைவன் தனது ஆவியாலும் அருளாலும் நிரப்புகிறார் என்பதற்கு மரியா உதாரணம்.

எத்தகைய குழப்பமான நேரமானாலும் ஒருவடைய வாழ்வில் குழந்தை பாக்கியம் என்பது மகிழ்ச்சியை தரும் செய்தியாகும். இறைவனின் படைப்புத் திட்டத்தில் பங்கேற்கும் பாக்கியம் பெண்களுக்கு வழங்கப்பட்டிருந்தாலும் அவற்றிலெல்லாம் உச்ச கட்டமாக இறைவனின் திருமகனை, உலகின் மீட்பரை தன் உதரத்தில் தாங்கும் பேற்றினை பெற்ற மரியாவால் மகிழாமல் இருக்க முடியுமோ?

அகாஸ்திஸ்தோஸ் என்கிற கீழைத் திரு அவையின் மரியன்னையின் புகழ்பாடல் பின்வருமாறு தொடங்குகிறது, ''உன் வழியாய் மகிழ்ச்சி பிரகாசிக்க செய்பவரே, மகிழ்வாய்! நீ மகிழ்வாய்!''

மகிழ்ச்சி என்கிற ஆவியின் கனியை மங்கள வார்த்தை நிகழ்வில் முழுமையாக தன்னில் பெற்றிருந்த மரியா, அன்னை மரியாவாக உருவெடுக்கிறார். இறைவனின் கொடையைப் பெற்ற அவர், அதே மகிழ்ச்சி அனைவரின் வாழ்விலும் நீக்கமற நிறைந்திருக்க வேண்டுமென்பதில் கருத்தாய் இருந்தார். எனவேதான் கானாவூர் திருமணத்தில், ஊரே கொண்டாட்டத்தில் இருந்தபோது அக்குடும்பத்திற்கு ஏற்பட்ட குறைவைக் கண்டு என்றும் குறையா மகிழ்ச்சியை தன் மகன் வழியாய் அவர்களுக்குப் பெற்றுத் தருகிறார்.

மகிழ்ச்சி இறைவனின் கொடையாக இருக்குமென்றால் அது ஒருவரை பக்குவப்படுத்தும். 'நிறை குடம் ததும்பாது' என்பார்கள். அதுபோன்ற இவர்கள் தற்பெருமை கொள்ளாது பிறரின் வாழ்வின் தேவைகள் ஏற்படும் போது அதைப் பூர்த்தி செய்பவர்களாகவும், குறைகளைக் களைந்து நிறைவை நோக்கி நடத்திச் செல்பவர்களுமாக இருப்பார்கள்.





நிலையாகும். மனுக்குலம் அனைத்திற்குமான தாய் என்று அவரைத் தேர்ந்தெடுத்ததனால், வானகத் தந்தையானவர் அவருடைய தாய்மையை வெளிப்படுத்த விரும்பினார், அதாவது ஒவ்வொரு காலத்திலும் அனைத்து மக்களுக்குமான அவருடைய இரக்கத்தையும் அக்கறையையும் வெளிப்படுத்த விரும்பினார்.

கல்வாரி மலையில், "இவரே உம் மகன்"; "இவரே உம் தாய்" (யோவா 19, 26.'.27), என்ற வார்த்தைகளால் இயேசு மரியாளை மீட்பின் நற்செய்தியை ஏற்றுக்கொள்ளவிருக்கிற அனைவருக்குமே முன்னதாகவே ஒரு தாயாக அவரைக் கொடுக்கின்றார். மேலும் இவ்வாறு அவர் மீதான விசுவாசிகளுடைய பிள்ளைப் பாசத்திற்கான அடித்தளத்தை ஏற்படுத்துகின்றார். புனிதர் யோவானைப் பின்பற்றி, நம்பிக்கையாளர்கள் அவர் தாய் மீதான கிறிஸ்துவினுடைய அன்போடு அவருடைய சொந்த வாழ்வில் அவரை ஏற்றுக்கொள்வதன் வழியாக அவர்களுடைய பக்தியையும் நீடிக்கச் செய்வார்கள்.

**திரு அவையின் தொடக்கம் முதலான மரியன்னை பக்தி**

2. நற்செய்தி ஏடுகள் திரு அவையின் தொடக்கம் முதலே மரியன்னை பக்தி இருந்ததை உறுதிப்படுத்துகின்றன.

லூக்கா நற்செய்தியினுடைய முதல் இரண்டு அதிகாரங்கள் மரியாளை மிகவும் போற்றியும் மற்றும் அவருடைய நினைவுகளை பெருமையோடு பாதுகாத்த யூதக் கிறிஸ்தவர்களுடைய இயேசுவின் தாய் மீதான குறிப்பிட்டதொரு கவனத்தை தொடர்புபடுத்துவதாகவும் தோன்றுகிறது.

மேலும், எலிசபெத்தினுடைய வியப்புகளில் சுருக்கிக் கூறப்படுகின்ற இயேசுவின் இளமைப் பருவ நிகழ்வுரைகளில் (Infancy narratives) மரியன்னை பக்திக்கான தொடக்கச் சொல்லாடல்களையும் காரணங்களையும் காண முடியும்: 'பெண்களுக்குள் நீர் ஆசி பெற்றவர் உம் வயிற்றில் வளரும் குழந்தையும் ஆசி பெற்றதே!..... ஆண்டவர் உமக்குச் சொன்னவை நிறைவேறும் என்று நம்பிய நீர் பேறுபெற்றவர்' (லூக் 1: 42, 45).

மரியாளின் புகழ்ச்சிப் பாடலில் ஆதிக்கிறிஸ்தவக் குழுமத்தில் மரியன்னை பக்கியானது பரவலாகி இருந்தற்கான சுவடுகள் இருக்கின்றன: 'இதுமுதல் எல்லாத் தலைமுறையினரும் என்னைப் பேறுபெற்றவர் என்பர்' (லூக் 1, 48). மரியாளின் உதடுகளில் இந்த வார்த்தைகளை வைத்ததன் மூலம், உலக முடிவு வரை அறிவிக்கப்படவிருக்கும் அவருடைய தனித்துவமிக்க மேன்மையைக் கிறிஸ்தவர்கள் அங்கீகரித்தனர்.

மேலும், நற்செய்திகள் (cf. லூக் 1: 24 – 35; மத் 1:23; யோவா 1:13) விசுவாசத்திற்கான சுருக்க விதியைத் தருகின்றது மற்றும் புனிதர் அந்தியோக்கு இஞ்ஞாசியாருடைய வார்த்தைகள் (cf. *Smyrm*. 1: 2: *SC* 10:155) மனுவுருவாதல் மறைபொருளோடு நெருங்கிய தொடர்புடைய மரியாளுடைய கன்னித்தன்மை மீதான முதல் கிறிஸ்தவ குழுமத்தினுடைய வியப்பிற்குச் சான்று கூறுகின்றது.

யோவான் நற்செய்தி, அவருடைய மகனுடைய பொது வாழ்வின் தொடக்கம் மற்றும் இறுதியில் மரியாளுடைய உடனிருப்பைக் குறித்துக் காண்பித்து, தொடக்க கிறிஸ்தவர்கள் முற்றிலும் கிறிஸ்துவினுடைய

அன்பைச் சார்ந்த மீட்புப் பணியில் மரியாளுடைய பங்கு பற்றி ஆர்வமுடன் அறிந்திருந்தனர்.

3. மரியன்னை பக்தியினுடைய சிறப்புக் கூறுகள் பற்றி, இரண்டாம் வத்திக்கான் சங்கமானது இவ்வாறு கூறுகின்றது: ‘திரு அவை மரியாவைத் தனிப்பட்டதொரு வணக்கத்தால் தக்க காரணத்துடன் பெருமைப்படுத்துகிறது. ஏனெனில், தம் மகனுக்குப் பிறகு, எல்லா வானதூதர்களுக்கும் மனிதர்களுக்கும் மேலாகக் கடவுளின் அருளால் உயர்த்தப்பட்டவரும், கிறிஸ்துவின் மறைநிகழ்ச்சிகளில் பங்கெடுத்தவருமாகிய இவர் கடவுளின் தூய்மைமிகு தாய் ஆவார். தூய கன்னியை தொடக்க முதலே, நம்பிக்கை கொண்டோர் ‘கடவுளின் தாய்’ என்றழைத்து வணங்கினர். தங்கள் துன்பங்கள், தேவைகள் அனைத்திலும் அவரை மன்றாடி, அவரது அடைக்கலத்தில் புகலடைந்திருக்கின்றனர்’ (*Lumen gentium,* n. 66).

மேலும், “*Sub tuum praesidium*” என்ற 3-ஆம் நூற்றாண்டு மரியாள் செபத்தில் வருகின்ற “நாங்கள் உம் ஆதரவுக்காக ஓடி வருகின்றோம்” என்பதைக் குறிப்பிட்டு, இந்தப் பண்பானது திரு அவையின் தொடக்க முதலே வெளிப்படுவதாகக் கூறுகின்றது.

4. இந்த நிலைப்பாடானது மரியாளினுடைய உருவ வேலைப்பாடுகளிலும் (iconography) திரு அவைத் தந்தையர்களின் படிப்பினைகளிலும் இரண்டாம் நூற்றாண்டு முதலே உறுதிப்படுத்தப்படுகின்றது.

உரோமை நகரில், ப்ரிசில்லா என்னும் அடிநிலைக் கல்லறைகளில் (catacombs of Priscilla), குழந்தையைக் கையில் ஏந்திய மாதாவினுடைய முதல் வேலைப்பாட்டை நாம் கண்டு அதிசயிக்க முடியும், அதே நேரத்தில் புனிதர் ஜஸ்டின் மற்றும் புனிதர் இரேணியுஸ் முதல் பெண்ணினுடைய (ஏவாள்) நம்பிக்கையின்மை மற்றும் கீழ்ப்படியாமைக்கான பரிகாரத்தை அவளுடைய நம்பிக்கை மற்றும் கீழ்ப்படிதலினால் சரிசெய்கின்ற புதிய ஏவாளாக மரியாளைக் குறிப்பிடுகின்றனர். லியோன் நகரத்து ஆயரின் கூற்றுப்படி, கிறிஸ்துவில் மீட்கப்படுவது ஆதாமுக்கு போதுமானதொன்றாக இல்லை, ஆனால் “மரியாளில் மீட்கப்படுவது ஏவாளுக்கு சரியான மற்றும் தேவையானதொன்றாக இருந்தது” (*Demonstratio apsotolica*, 33). இந்த வகையில், அவர் மீட்புப் பணியில் பெண்ணினுடைய முக்கியத்துவத்தை வலியுறுத்துகிறார் மற்றும் கிறிஸ்தவத்தில் கிறிஸ்துவிற்கு என்றென்றைக்கும் கொடுக்கப்படுகின்ற பக்தியிலிருந்து பிரிக்கமுடியாததொரு மரியன்னை பக்திக்கானதொரு அடித்தளத்தை அமைக்கின்றார்.

**மரியன்னை பக்தியானது கிறிஸ்தவ நம்பிக்கையில் உறுதியாக வேரூன்றியிருக்கிறது**


5. மரியாள் பக்தியானது முதலில் நெஸ்டோரியஸ் எழுப்பிய பிரச்சனைக்குப் பிறகு கி.பி. 431-ஆம் ஆண்டு நடைபெற்ற எபேசு திருச்சங்கம் ஆணையிட்டு அறிவித்த மரியாள் “இறைவனின் தாய்” (*Theotókos*) என்பதில் வெளிப்படுத்தப்படுகிறது.

மரியாளுடைய இறைத் தாய்மையை நிராகரிக்கும் அளவுக்குச் சென்ற நெஸ்டோரிசியஸினுடைய தெளிவற்ற மற்றும் நிலையற்ற நிலைப்பாட்டிற்கான அந்தப் புகழ்பெற்ற எதிர்வினை மற்றும் அதைத்





நினைவுபடுத்துகின்றது. நமக்காக பலியான ஆண்டவர் இயேசுவை உற்று நோக்கியவர்களாக இந்த முதல் வாசகத்திற்குச் செவிசாய்ப்போம்.



## இரண்டாம் வாசக முன்னுரை

சகோதர சகோதரிகளே! அன்று மக்களின் பாவங்களுக்காக விலங்கினங்கள் பலியாகப் படைக்கப்பட்டன. ஆனால், நம்மீது கொண்ட அன்பினால் படைத்தவரே தமது உடலையும், இரத்தத்தையும் பலியாக்கினார் என்ற உண்மையை எடுத்துரைக்கும் எபிரேயருக்கு எழுதப்பட்ட திருமுகத்திலிருந்து எடுக்கப்பட்டுள்ள இன்றைய இரண்டாம் வாசகத்திற்குச் செவிசாய்ப்போம்.

## மன்றாட்டுகள்

1. எங்கள் மேல் எல்லையில்லா அன்பு கொண்டுள்ள இறைவா! உமது திருமகனின் திருவுடல் திரு இரத்தத்தினால் ஊட்டம்பெறும் எம் தாய்த் திரு அவை தொடர்ந்து வளரவும், எம் திருத்தந்தை, ஆயர்கள், குருக்கள், துறவறத்தார் மற்றும் பொதுநிலையினர் என்றும் உம் அன்பில் வளரத் தேவையான அருளைத் தந்திட வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.

2. உம் திருவுடல் திரு இரத்தத்தை எங்களுக்காகக் கொடுத்த இயேசு ஆண்டவரே! எம் பங்கிலும், மறைமாவட்டத்திலும் இந்த வருடம் முதன் முறையாக உமது உடலையும் இரத்தத்தையும் புதுநன்மை என்ற அருள் அடையாளம் மூலம் பெறும் சிறுவர் சிறுமியர் மற்றும் பெரியவர்கள் அனைவரையும் நீரே தொடர்ந்து உமது பாதுகாப்பில் வைத்து வழிநடத்திட வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.

3. ஞானத்தின் ஊற்றே எம் இறைவா! விடுமுறைக்குப் பின் பள்ளி, கல்லூரிக்குச் செல்லும் எம் மாணவச் செல்வங்களோடு நீரே என்றும் இருந்து அவர்கள் உடல் உள்ள ஆன்ம வளர்ச்சியை நிறைவாய் பெற்றிட அருள்புரிந்திட வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.

4. பாதுகாக்கும் தெய்வமே எம் இறைவா! இவ்வுலகில் உடல் நலம் மற்றும் மனநலம் குன்றியுள்ள அனைவரையும் நீரே பாதுகாக்க வேண்டுமாகவும், அவர்கள் உடலும் மனமும் மீண்டும் புதுப்பொலிவு பெற்று புதுவாழ்வு பெற்றிடத் தேவையாக அருளைத் தந்திட வேண்டுமாகவும் ஆண்டவரே உம்மை மன்றாடுகின்றோம்.

அதேபோல் எம் திரு அவையும் பிளவுபடாமல் ஒன்றாக, ஒற்றுமையாக செயல்பட வேண்டுமென செபிக்கிறோம். அதற்காக எம் திருத்தந்தை, ஆயர்கள், குருக்கள் மற்றும் துறவிகள் எடுக்கும் அனைத்து முயற்சிகளும் வெற்றியடைய வேண்டுமென இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.

2. சமாதானத்தின் ஊற்றே எம் இறைவா! எமது குடும்பங்களில் நிலையான சமாதானம் நிலவவும், கணவன் - மனைவி, பெற்றோர் – பிள்ளைகள் மற்றும் உறவுகளுக்கிடையேயுள்ள கருத்து வேறுபாடுகள், சண்டை சச்சரவுகள் மறைந்து, நாங்கள் அனைவரும் சமாதானத்துடனும் ஒற்றுமையுடனும் வாழ்ந்திடத் தேவையான அருள்தர வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.

3. என்றும் எங்களோடு இருக்கும் எம் இறைவா! ஏதோ காரணங்களுக்காக எங்களை விட்டுப் பிரிந்து வெளியூர்களிலும் வெளிநாடுகளிலும் வாழும் எம் உறவுகளையும், எம் மனங்களிலிருந்து மறைந்துபோன உறவுகளையும் நீரே பாதுகாத்து வழிநடத்திட வேண்டுமாய் இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.

4. தவிப்பினைப் போக்கிடும் இறைவா! மழையின்றி நீருக்காகத் தவிக்கின்ற எங்களை ஏறெடுத்துப் பாரும். தேவையான மழையைத் தந்து எங்களையும் எல்லா உயிரினங்களையும் காத்தருள வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.

## ஆண்டவரின் திருவுடல், திரு இரத்தப் பெருவிழா (03-06-2018)
## (விப. 24:3-8; எபிரே 9:11-15; மாற்கு 14:12-16,22-26)

### திருப்பலி முன்னுரை

ஆண்டவர் இயேசுவுக்குள் அன்புநிறைந்த சகோதர சகோதரிகளே! இன்று நம் தாய்த் திரு அவையோடு இணைந்து நம் ஆண்டவரின் திருவுடல், திரு இரத்தப் பெருவிழாவைக் கொண்டாடுகின்றோம். நமது பாவங்களுக்கு பலியாக தமது உடலையும் இரத்தத்தையும் கையளித்த நம் ஆண்டவர் இயேசு, நமது ஆன்மாவை வளர்த்தெடுக்க, ஆன்ம உணவாக தமது உடலையும் இரத்தத்தையும் நமக்கு கொடுத்ததனை நினைவுகூர்ந்து இன்று கொண்டாடுகின்றோம். இந்த நன்நாளிலே நம் ஆண்டவருக்கு நன்றி கூறியவர்களாய், நமது உடல் பொருள் ஆவி ஆன்மா அனைத்தையும் நம் ஆண்டவரிடம் ஒப்புக்கொடுத்தவர்களாகக இன்றைய திருப்பலியில் பங்கெடுப்போம். நம் ஆண்டவர் இம்மையில் நம்மை வழிநடத்தி மறுமையில் மோட்சத்தில் வரவேற்கும் வரம் வேண்டியவர்களாய் இந்த தியாகப்பலியில் பங்குபெறுவோம்.

### முதல் வாசக முன்னுரை

அன்புக்குரியவர்களே! விடுதலைப்பயண நூலிலிருந்து எடுக்கப்பட்டுள்ள இன்றைய முதல் வாசகம் இஸ்ராயேல் மக்களுக்கும் கடவுளுக்கும் இருந்த உடன்படிக்கையின் உறவை எடுத்துரைப்பதோடு மோசே மக்களுக்காக ஒப்புக்கொடுத்த பலியையும் நமக்கு







தொடர்ந்த எபேசு திருச்சங்கத்தினுடைய முடிவுகளை மகிழ்ச்சியோடு ஏற்றுக்கொண்ட தன்மையானது, மரியாள் பக்தியானது எந்த அளவுக்கு கிறிஸ்தவர்களிடையே ஆழமாக வேரூன்றியிருந்தது என்பதை உறுதிப்படுத்துகின்றது. குறிப்பாக எபேசுத் திருச்சங்கத்திற்குப் பிறகு, வியத்தகு முறையில் கடவுளின் மக்கள் மரியாவை அதிகமதிகம் வணங்கவும் அன்பு செய்யவும் உதவிக்கழைக்கவும் கண்டுபாவிக்கவும் முற்பட்டனர் (*Lumen gentium,* n. 66). குறிப்பாக இது, 5-ஆம் நூற்றாண்டினுடைய தொடக்கத்திலிருந்து திருவழிபாட்டு விழாக்களில் வெளிப்படுத்தப்பட்ட "மரியாள் இறைவனின் தாய்" என்ற விழாவானது குறிப்பிட்டதொரு முக்கியத்துவத்தைப் பெறுகின்றது. இது எருசலேமில் ஆகஸ்டு 15-ஆம் நாள் கொண்டாடப்பட்டது, பிறகு இது மரியாளுடைய உறக்கம் (Dormition) அல்லது விண்ணேற்பு (Assumption) விழாவானது.

யாகப்பருடைய தொடக்க நற்செய்தியினுடைய (*Proto Evangelium*) தாக்கத்தினால், மரியாளுடைய பிறப்பு (The Nativity), கருத்தரித்தல் (The Conception) மற்றும் காணிக்கையாக ஒப்புக்கொடுத்தல் (The Presentation) போன்ற விழாக்களும் அறிமுகப்படுத்தப்பட்டன. மேலும் குறிப்பாக இது மரியாளுடைய மறையுண்மைகளின் சில முக்கியமான தன்மைகளை கோடிட்டுக் காட்டுவதற்கும் உதவியது.

6. இந்நாள்வரை, வளர்ச்சி மற்றும் இப்பக்தியை மேலும் புதுப்பிக்க உதவிய தளர்ச்சிகளிடையே, மரியன்னை பக்தியானது அதிசயிக்கத்தக்க வகையில் தொடர்ச்சியாக வளர்ந்திருக்கிறதென்று நம்மால் உறுதியாகச் சொல்லமுடியும்.

இரண்டாம் வத்திக்கான் திருச்சங்க நிகழ்வு முதல், திரு அவையின் மறையுண்மையினுடைய ஆழமான புரிதல்களோடும் நிகழ்கால கலாச்சாரங்களிடையேயான உரையாடலோடும், என்றைக்கும் நம்பிக்கை மற்றும் இப்பூமியில் கடவுளுடைய மக்களினுடைய வாழ்வில், மரியன்னை பக்தியானது உறுதியாக வேரூன்றி ஒரு சீரான வளர்ச்சியை நோக்கிச் செல்வதாகத் தோன்றுகிறது.

மூலம்: **John Paul II, *Mary has always been specially venerated*, in *L'Ossevatore Romano Weekly Edition in English*, 22 October 1997, p. 11.**

# அம்மா!.............!..........!!...............!!!. என்று அழைத்தால் ........

திருமதி. ஃபிலோம்மா, திருச்சி

**அம்மா! ........ என்று அழைத்தால் அப்பாச ஒலி**
**ஒரு அமுத கானம்**
**அன்பு வீணையின் ஆனந்த ராகம்**
**இன்பக் கடலலையின் ரீங்கார இன்னிசை**
**அம்மா! ...... என்றழைக்காத உயிரில்லை ....**
**அம்மாவை வணங்காத உயர்வில்லை**

மழலைப் பருவமுதல் வாழ்வின் இறுதிவரை
மனிதர் நாவில் சுவையூட்டும் இன்பச்சொல் அம்மா
அம்மா மரியே!.. என்று நாம் அழைப்பது
தேனினும் இனிய மதுரகானம்
பல்வேறு சமயத்தினருக்குங்கூட
அன்னை மரியா ஒரு அட்சய பாத்திரமே
நோய்கள் நீங்கி நலம் பெற
கவலைகள் தீர, குழப்பங்கள் மறைய
அம்மா.....!! என அன்பொழுக அழைத்து
அவர் பாதம் நாடி வருவோர் எண்ணிறந்தோர்

குழந்தையாக இருந்த போது நாம் நம் தாயிடமிருந்து பெற்ற
பாசம், பாதுகாப்பு, அரவணைப்பு ஆகியன
வளர்ச்சியடைந்த பின்னர் நமக்குக் கிடைப்பதில்லை
எனவே நம் மனம் தாயின் அன்புக்காக ஏங்குகிறது
அந்த ஏக்கத்தை நீக்க, தாயினும் மேலான
அன்பையும், அரவணைப்பையும், பாசத்தையும் தருபவள்
நமது அன்னை மரியா
எனவேதான் இந்த அம்மாவின் திருமடி தேடி ஓடுகிறோம்

**'நமக்கொரு தாய் இருக்கின்றாள்**
**அவள் என்றும் நம்மைக் காக்கின்றாள்'**
**பரிவுள்ள மாமரியே! உமது பரிந்துரை ஒருநாளும்**
**இல்லையென்று போனதில்லை அம்மா!**
**நாங்கள் உம் பாதம் பற்றி வேண்டுவதைக் கேளம்மா.......**

மீட்பின் பயனை நாங்கள் அடைந்திட,
ஆலய வழிபாட்டில் ஆர்வமுடன் நாங்கள் பங்கேற்க,
இறைவார்த்தையைச் சிந்தித்துப் பயன்பெற,
உமது மகன் திருவுளத்தை ஏற்று பணிவுடன் வாழ்ந்திட,
ஆழ்ந்த விசுவாசத்தால் உள்ளத்தில் இறைஇயேசுவை ஏற்று அவருடன் வாழ்ந்திட,
இயேசுவின் ஆவியாரால் எமது உள்ளங்கள் பற்றி எரிய,
திரு அவையின் முறைமைகளை ஏற்று அதன்படி நாங்கள் வாழ்ந்திட,





**இவற்றிற்கெல்லாம் நீரே ஒரு நல்ல தீர்வு தரும்படியாகவும், எம் நாடும் நாட்டு மக்களும் உமது பாதுகாப்பிலும், அன்பிலும், அரவணைப்பிலும் நிம்மதியாக வாழச் செய்திட வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.**

## மூவொரு இறைவன் பெருவிழா (27-05-2018)
## (இச. 4:32-34,39-40; உரோ 8:14-17; மத் 28:16-20)


### திருப்பலி முன்னுரை

மூவொரு இறைவனுக்குள் அன்பான சகோதர சகோதரிகளே! இன்று நம் தாய் திரு அவையோடு இணைந்து தமத்திருத்துவப் பெருவிழாவைக் கொண்டாடுகின்றோம். ஆள்வகையிலே மூவராய் இருக்கும் நம் கடவுள் ஒரே ஞானம், ஒரே திருவுளம், ஒரே வல்லமை, ஒரே தேவ இயல்பு கொண்டிருப்பதால் ஒரே கடவுளாய் இருக்கிறார் என்பதை நாம் அறிவோம். இத்தகைய இறைவன் ஒற்றுமையுடனும் சமாதானத்துடனும் வாழ இன்று நம்மை அழைக்கின்றார். நம் வாழ்வில் நடக்கும் அனைத்தையும் நம் மூவொரு இறைவனிடம் ஒப்படைப்போம். தந்தை, மகன், தூய ஆவியானவர் போல நாமும் ஒற்றுமையாக வாழ்வோம். அதற்குத் தேவையான எல்லா வரங்களையும் வேண்டியவர்களாய் இந்த உன்னத பலியில் பங்கெடுப்போம்.

### முதல் வாசக முன்னுரை

அன்புக்குரியவர்களே! நம் மூவொரு கடவுள் மற்ற தெய்வங்களை விட எவ்வளவு உயர்ந்தவர், அன்பானவர், வேறுபட்டவர், நம்முடைய நலன்களில் அக்கறை கொண்டவர் என்பதை எடுத்துக்கூறும் இணைச்சட்ட நூலிலிருந்து எடுக்கப்பட்ட முதல் வாசகத்திற்குச் செவிகொடுப்போம்.

### இரண்டாம் வாசக முன்னுரை




அன்பானவர்களே! தூய பவுலடிகளார் உரோமையருக்கு எழுதிய திருமுகத்திலிருந்து எடுக்கப்பட்டுள்ளது. இன்றைய இரண்டாம் வாசகம் நாமனைவரும் மூவொரு கடவுளின் பிள்ளைகள்; உரிமைப் பேறுபெற்றவர்கள்; அதுவும் கடவுளையே 'அப்பா, தந்தையே' என அழைக்கும் பாக்கியம் பெற்றவர்கள் என நமது உரிமைப்பேற்றைப் பற்றிக் கூறும் இந்த இரண்டாம் வாசகத்திற்குச் செவிசாய்ப்போம்.

### மன்றாட்டுகள்

1. மூவொரு இறைவா! நீர் எவ்வாறு ஒற்றுமையோடு இருக்கின்றீரோ,

## முதல் வாசக முன்னுரை



அன்பார்ந்தவர்களே! திருத்தூதர் பணிகள் நூலிலிருந்து எடுக்கப்பட்டுள்ள இன்றைய முதல் வாசகம், தூய ஆவியார் சீடர்கள் மீது எவ்வாறு இறங்கி வந்தார் என்பதையும், அதன் பிறகு அவர்களின் வாழ்வில் நடந்தவைப் பற்றியும் நமக்கு எடுத்துரைக்கின்றது. நமது இதயங்களிலும் தூய ஆவியாரின் அன்பு ஆட்சி செய்ய வேண்டி செபித்தவர்களாய் இந்த முதல் வாசகத்திற்குச் செவிசாய்ப்போம்.

## இரண்டாம் வாசக முன்னுரை

தூய பவுலடிகளார் கொரிந்தியருக்கு எழுதிய முதல் திருமுகத்திலிருந்து எடுக்கப்பட்டுள்ள இன்றைய இரண்டாம் வாசகம் தூய ஆவியாரின் பல்வேறுபட்ட செயல்பாடுகள் குறித்து நமக்கு விளக்குகிறது. நாமனைவரும் பல்வேறு வேறுபாடுகளைக் கொண்டிருந்தாலும் அவரால் இணைக்கப்பட்டுள்ளோம் என்ற உண்மையை உணர்ந்தவர்களாக இவ்விரண்டாம் வாசகத்திற்குச் செவிசாய்ப்போம்.

## மன்றாட்டுகள்

1. எங்களுக்குத் துணையாளராக தூய ஆவியாரை அனுப்பிய இறைவா! எம் தாய் திரு அவையை நீரே தொடர்ந்து வழிநடத்திடவும் எம் திருத்தந்தை, ஆயர்கள், குருக்கள், துறவறத்தார் மற்றும் பொதுநிலையினர் அனைவரும் தூய ஆவியாரால் முழுமையாக ஆட்கொள்ளப்பட்டு இவ்வுலகில் இறையரசை முழுவீச்சில் பரப்பிடத் தேவையான அருளைத் தந்திட வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.

2. வழிநடத்தி காத்தருள்கின்ற இறைவா! எம் மறைமாவட்டத்தையும், எம் பங்கினையும் ஆசிர்வதித்தருளும். இங்குள்ள உம் மக்களாகிய நாங்கள் அனைவரும் நல்வாழ்வு வாழ்ந்து வாழ்வில் முன்னேறிடத் தேவையான அருளையும் ஞானத்தையும் தர வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.

3. புதுப்பிறப்பு அளிக்கும் இறைவா! எம் நாட்டிலுள்ள இளையோரை நீரே ஆசிர்வதித்தருளும். அவர்களுக்குத் தகுந்த படிப்பையும், வேலையையும், வாழ்க்கைத் துணையையும் கொடுத்து அவர்கள் புத்துணர்வோடு எப்போதும் வளர்ச்சிப் பாதையில் சென்றிடத் தேவையான அருளைத் தந்திட வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.

4. அமைதியின் ஊற்றே எம் இறைவா! எம் தாய் நாட்டிற்காக உம்மை வேண்டுகின்றோம். எங்கு பார்த்தாலும் போராட்டங்கள், கலவரங்கள், பயங்கரங்கள், பாதுகாப்பின்மை, குழப்பங்கள் நிறைந்துள்ளன.





மீட்பர் இயேசுவின் நற்செய்தியை உலகெங்கும் பரப்பும்
'தேவ அழைத்தல்' பெருகிட,
பெற்றோருக்குப் பணிந்து வாழ்ந்திட,
முதுமை அடைந்த பெற்றோரைப் பேணிக்காக்க,
எங்கள் பிள்ளைகளை கிறிஸ்தவ நெறியில் வளர்த்திட,
கற்பைக் களங்கமின்றிக் காத்தட,
துயருற்றோர் ஆறுதல் பெற்று மகிழ்ந்து வாழ,
மறுஉலக வாழ்வின்மேல் மனதைப் பதித்தவர்களாய் வாழ்ந்திட,
எம் வாழ்வின் முடிவை ஆண்டவரிடம் ஒப்படைத்து
அவர் மேல் நம்பிக்கையுடன் வாழ,
அம்மா!, உம் உறவால் நாங்கள் பெருமகிழ்ச்சி அடைந்திட.........
ஆகிய
அனைத்து மன்றாட்டுக்களையும் பரிவுடன் ஏற்றுப் பரிந்துரைப்பாய் அம்மா!
மேலும்,
உலகில் வன்முறைகளும், தீவிரவாதங்களும், இயற்கைச்
சீற்றங்களும் ஒழிந்து மக்கள் அமைதியாக வாழ்ந்திட
எமது இந்திய நாட்டில் சமயக் காழ்ப்புணர்ச்சியால்
பிறமதத்தலைவர்களைத் துன்புறுத்தும் வன்முறைகள் நீங்கி
நாடெங்கும் மக்கள் சமய சுதந்திரத்துடன் வாழந்திட,
அரசியலாரிடையே சுயநலம் நீங்கி அவர்கள் நாட்டு மக்கள்
அனைவரையும் ஒருதாய் பிள்ளைகளாக எண்ணி
அவர்களின் நலன்களைப் பேணிக் காத்திட,
அயல் நாட்டின் எல்லைப் பிரச்சனையால்
எல்லையில் நடைபெறும் போரில் எண்ணிலடங்கா
வீரர்கள் தம் இன்னுயிரை ஈந்து மடியும் அவலம் நீங்கிட
தமிழகத்தின் நிலவும் காவிரிநீர்ப் பிரச்சனை விரைவில் முடிவிற்கு வந்து
விவசாயிகள் அனைவரும் தம் வேளாண்மைக்குத் தேவையான
நீரைப் பெற்று அவர்களின் வாழ்வாதாரம் வளம் பெற்றிட,
மாணவர்களின் தேர்வு முறைகள் வேறுபாடின்றி
சமநிலை நோக்குடன் நடைபெற்று அவர்களின்
எதிர்காலம் ஒளிமயமானதாக விளங்கிட,
போராட்டங்கள், தீவிரவாதங்கள், கொலைகள்
கொள்ளைகள், கோடிக்கணக்கான பணச் சுரண்டல்கள்
ஆகிய தீமைகள் வேரற்று, மக்கள் அமைதியாக
மனநிறைவுடன் வாழ்ந்திட,
மீனவர் பிரச்சனைகள் இல்லாமல் போக,
உம்மகனிடம் நிறை அருள் பெற்றுத் தருவாய் அம்மா!
**அம்மா மரியே! மனித இனத்தின் மகிழ்ச்சியே............ வாழ்க!**
**இறைமக்களின் நம்பிக்கையே .................... வாழ்க!!**
**வாழ்க்கையே சுமையாய்த் துன்புறுவோருக்கு ஆறுதலே........**
**வாழ்க!!!**
**அம்மா.........! நின்**
**அழகு ஒளிரும் திருமுகம் காண,**
**அணைத்துக் காக்கும் கரங்களில் தவழ,**
**உமது மென்மடியில் முகம் புதைத்துக் கண்வளர**
**எமக்குக் கொள்ளை ஆசை அம்மா!**



# ஞாயிறு திருவழிபாட்டுத் துணைவன்

அருள்பணி. ஆல்பர்ட் ம.ஊ.ச., ஜீவமாதா இல்லம், தஞ்சாவூர்.


## ஆண்டவரின் விண்ணேற்றப் பெருவிழா 13-05-2018
## (திப. 1:1-11; எபேசி 4:1-13; மாற்கு 16:15-20)

### திருப்பலி முன்னுரை

ஆண்டவர் இயேசுவுக்குள் மிகவும் அன்பான சகோதர சகோதரிகளே! உயிர்த்த நம் ஆண்டவரின் விண்ணேற்ற விழாவைக் கொண்டாட இன்று நம் தாய் திரு அவை நம்மை அன்போடு அழைக்கின்றது. உண்மையான நம் தெய்வம் இவ்வுலகத்திற்கு வந்து பல்வேறு பணிகளைச் செய்து, நமது பாவங்களுக்காக பாடுபட்டு, மரித்து, உயிர்த்து, தம் சீடர்களுக்குப் பலமுறை தோன்றி தேற்றியதோடு, தம் பணிக்காக அவர்களைத் திருத்தூதர்களாகவும் ஏற்படுத்தி தூய ஆவியாரின் துணையைக் கொடுத்து உலகமெங்கும் நற்செய்தியைப் பறைசாற்ற அனுப்பினார். அதன் பயனாக இன்று நீங்களும் நானும் மீட்பின் மக்களாக, கிறிஸ்துவை அறிந்தவர்களாக வாழ்கின்றோம். நமது இந்த கிறிஸ்தவ அனுபவத்தைப் பிறரோடு தயங்காமல் பகிரும் வரம் வேண்டியவர்களாய் நம் ஆண்டவரின் விண்ணேற்பு திருப்பலியில் பங்கெடுப்போம்.

### முதல் வாசக முன்னுரை

அன்பிற்குரியவர்களே! இன்றைய முதல் வாசகம் திருத்தூதர் பணிகள் நூலிலிருந்து எடுக்கப்பட்டுள்ளது. நம் ஆண்டவரின் இந்த மண்ணுலக வாழ்வைப் பற்றியும், இறுதியில் அவரின் விண்ணேற்றத்தைப் பற்றியும் கூறுவதோடு நம் ஆண்டவரின் சாட்சிகளாய் வாழ நமக்கு அழைப்பு கொடுக்கும் இந்த முதல் வாசகத்திற்கு மலர்ந்த முகத்தோடு செவிசாய்ப்போம்.



### இரண்டாம் வாசக முன்னுரை

இன்றைய இரண்டாம் வாசகமானது தூய பவுலடிகளார் எபேசியருக்கு எழுதிய திருமுகத்திலிருந்து எடுக்கப்பட்டுள்ளது. உயிர்த்து விண்ணேற்றமடைந்த நம் ஆண்டவர் நம் அனைவருக்கும் நல்வாழ்வைப் பரிசாகக் கொடுக்கிறார்





என்பதை எடுத்துக் கூறுவதோடு அவர் கொடுத்துள்ள அழைப்புக்கேற்ப வாழ நமக்கு அழைப்பு விடுக்கும் இந்த இரண்டாம் வாசகத்திற்கு ஆர்வத்தோடு செவிசாய்ப்போம்.

### மன்றாட்டுகள்

1. உயிர்த்து விண்ணேற்றமடைந்த இயேசுவே, ஆண்டவரே! உம்மால் திருத்தந்தையாக ஏற்படுத்தப்பட்ட எம் திருத்தந்தை பிரான்சிஸ், மேலும் எங்களை வழிநடத்த நீர் கொடுத்துள்ள எம் ஆயர்கள், குருக்கள் மற்றும் துறவியரை நீரே பாதுகாத்து வழிநடத்திடவும், அவர்கள் தங்களால் இயன்றவரை உலகம் முழுவதும் பரவி உம் பணியைச் செய்திடவும் தேவையான அருளைத் தந்திட வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.
2. எங்களோடு இறுதிவரை வாழும் எம் இறைவா! நீர் எங்களுக்கு பரிசாகக் கொடுத்துள்ள இந்த வாழ்க்கையை நல்ல முறையில் வாழவும், வாழ்வின் மகத்துவத்தை உணர்ந்தவர்களாக அதனை பிறரோடு பகிர்ந்து வாழத் தேவையான வரம் தர வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.
3. நாங்கள் பெற்றுக்கொண்ட அழைப்புக்கேற்ப வாழ அழைப்பு விடுக்கும் இறைவா! உமது அழைப்பை எம் நாட்டு சிறியவர், இளைஞர், இளம்பெண்கள், பெரியவர்கள் அனைவரும் உணர்ந்து நாடும் வீடும் போற்றக்கூடிய வகையில் வாழ்ந்திட வாழ்வில், தொழிலில், பணியில் முன்னேறிடத் தேவையான அருளைத் தந்திட வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.
4. வாழ்வின் ஊற்றே இறைவா! வயது முதிர்ச்சியின் காரணமாகவும், நோய்வாய்ப்பட்டதின் காரணமாகவும் மரணத்தின் வாயிலில் இருக்கும் அனைவரையும் நீரே பாதுகாத்து தேற்றிட வேண்டுமேன்று இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.

## பெந்தகோஸ்தே பெருவிழா (20-05-2018)
## (திப. 2:1-11; 1கொரி 12:3-7, 12-13; யோவான் 20:19-23)

### திருப்பலி முன்னுரை

ஆண்டவர் இயேசுவில் அன்பார்ந்த சகோதர சகோதரிகளே! இன்று பெந்தகோஸ்தே பெருவிழாவைக் கொண்டாடி மகிழ நம் தாய்த் திரு அவை நம்மை அழைக்கின்றது. உயிர்த்த நம் ஆண்டவர் இயேசு கிறிஸ்து விண்ணேற்றமடைந்ததை சென்ற வாரம் சிறப்பாகக் கொண்டாடினோம். விண்ணகம் சென்ற ஆண்டவர் இயேசு, தம்மேல் நம்பிக்கை கொண்டவர்களின் இதயங்களை நிரப்பிடவும், அவர்களில் அன்பின் தீ பற்றியெரியச் செய்திடவும், அவர்களுக்குத் துணையாய் இருந்திடவும் தூய ஆவியாரை அனுப்பினார். தூய ஆவியாரும் நெருப்பு போன்ற பிளவுற்ற நாவுகள் வடிவில் அவர்கள் மேல் இறங்கியது. நாம் கொண்டாடும் இந்தப் பெருவிழா திருப்பலியின் மூலம் தூய ஆவியார் நம் இதயங்களிலும் இறங்கிவந்து குடிகொள்ளும் வரம் வேண்டி இந்த தியாகப்பலியில் பங்கெடுப்போம்.